நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

### கரும்பு டன்னுக்கு ரூ. 2,500: சரத் பவாருக்கு ஜெயலலிதா கடிதம்

First Published : 17 Feb 2010 03:52:40 AM IST



சென்னை, பிப்.16: கரும்புக்கு கொள்முதல் விலையாக டன்னுக்கு ரூ. 2,500 கிடைக்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசுக்கு அதிமுக பொதுச்செயலாளர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் எழுதிய கடிதத்தை மத்திய வேளாண்துறை அமைச்சர் சரத்பவாரிடம் அதிமுக எம்.பி.க்கள் செவ்வாய்க்கிழமை வழங்கினார்கள்.

அந்தக் கடிதத்தின் விவரம்:

தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகால திமுக ஆட்சியில் நியாயமான கொள்முதல் விலை கிடைக்காமல் கரும்பு விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதிமுக ஆட்சிக் காலத்தில் மத்திய அரசின் ஆதார விலையான ரூ. 795 உடன், மாநில அரசின் ஆதார விலையான ரூ. 219 சேர்த்து டன்னுக்கு ரூ. 1,014 வழங்கப்பட்டது. அதிமுக ஆட்சியில் வெளிச்சந்தையில் சர்க்கரையின் விலை கிலோவுக்கு ரூ. 12.50 முதல் ரூ. 14 ஆக இருந்தது.

மத்திய அரசின் நுகர்பொருள், உணவு மற்றும் பொதுவிநியோகத் துறை கரும்புக்கான ஆதார விலையை ரூ. 1,298.40 ஆக உயர்த்தி அறிவித்தது.

அதனுடன் மாநில அரசின் ஆதார விலையான ரூ. 139 சேர்த்து டன்னுக்கு ரூ. 1,437.40 மட்டுமே தமிழக அரசு வழங்கி வருகிறது. ஆனால் இப்போது சர்க்கரையின் விலை கிலோவுக்கு ரூ. 44 வரை விற்கப்படுகிறது.

திமுக அரசின் தவறான நடவடிக்கைகள் காரணமாக அதிமுக ஆட்சியில் இருந்ததைவிட சர்க்கரை உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது. அதிமுக ஆட்சியில் 2005}06}ல் 21.38 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த சர்க்கரை உற்பத்தி 2008}09 திமுக ஆட்சியில் 16.16 லட்சம் மெட்ரிக் டன்னாக குறைந்துள்ளது.

கள்ளச் சந்தை, பதுக்கல்காரர்கள் மற்றும் சமூக விரோதிகளால் சர்க்கரையின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

கரும்புக்கு கொள்முதல் விலையாக உத்தரப்பிரதேசத்தில் ரூ. 2,100 வழங்கப்படுகிறது. தமிழகத்தைவிட மற்ற மாநிலங்களில் கொள்முதல் விலை அதிகமாகவே உள்ளது. சில வடமாநிலங்களில் டன்னுக்கு ரூ. 2,250 வரை வழங்கப்படுகிறது.

தமிழகத்தில் கரும்பு விவசாயிகளுக்கு டன்னுக்கு குறைந்தபட்சம் ரூ. 2,500 கிடைக்கும் வகையில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்தில் உள்ள திமுக அரசு கரும்பு விவசாயிகளுக்கு எதிராக செயல்பட்டு வருகிறது. அதிலிருந்து தமிழக விவசாயிகளை காப்பாற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜெயலலிதா கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தக் கடிதத்தில் அதிமுக எம்.பி.க்கள் எம். தம்பித்துரை, வி. மைத்ரேயன், எஸ். செம்மலை, கே. மலைச்சாமி, என். பாலகங்கா, பி. வேணுகோபால், ஒ.எஸ். மணியன், சி. ராஜேந்திரன், சி. சிவசாமி, எம். ஆனந்தன், எஸ். அன்பழகன், என்.ஆர். கோவிந்தராஜர், ஏ. இளவரசன், கே. சுகுமார், பி. குமார் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

**தென்னையைத் தாக்கும் கேரள வாடல் நோய்**

First Published : 17 Feb 2010 01:11:15 AM IST

பொள்ளாச்சி, பிப். 16: பொள்ளாச்சிப் பகுதியில் அதிக அளவில் வேகமாகத் தென்னையைத் தாக்கி வரும் கேரள வாடல் நோயைக் கட்டுப்படுத்த அதிகாரிகள் தீவிரமாக முயற்சிக்க வேண்டும் என்று ஆழியாறு நீர்த்தேக்கத் திட்டக்குழுத் தலைவர் சின்னச்சாமி விவசாயிகள் முறையீட்டுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

பொள்ளாச்சி கோட்டாட்சியர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை விவசாயிகள் முறையீட்டுக் கூட்டம் நடந்தது. இதில் சின்னச்சாமி பேசியது:

பொள்ளாச்சிப் பகுதியில் அதிக அளவில் தென்னை பயிரிடப்பட்டுள்ளது. வாழ்நாள் பயிரான தென்னையை இப்போது கேரள வாடல் நோய் அதிக வேகமாகத் தாக்கி வருகிறது. கேரள எல்லையோரத்தில் உள்ள மணக்கடவு பகுதியில் பெரும்பாலான தென்னை மரங்கள் இந்நோய்த் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. இப்போது சிறிது சிறிதாகப் பரவி சேத்துமடை வரை பரவியுள்ளது. நோயைக் கட்டுப்படுத்த வேளாண்மைத்துறையினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். சேத்துமடைப் பகுதியில் காட்டு யானைகளால் தென்னை மரங்களுக்குத் தொடர்ந்து சேதம் ஏற்படுகிறது.

இப்பிரச்சினையைத் தடுப்பதற்கு அரசு மின்வேலி அமைத்துத் தர வேண்டும். விவசாயிகள் அமைத்துள்ள மின்வேலியை வனத்துறையினர் அகற்றக் கூடாது என்று சின்னச்சாமி தெரிவித்தார்.

### உழவர் சந்தையில் அமைச்சர் திடீர் ஆய்வு

First Published : 17 Feb 2010 03:41:09 AM IST

திருப்பூர், பிப்.16: திருப்பூர் உழவர் சந்தையில் செவ்வாய்க்கிழமை அதிகாலை அமைச்சர் நடத்திய திடீர் ஆய்வின் போது, அடிப்படை வசதிகள் இல்லை என்பது உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளை விவசாயிகள் தெரிவித்தனர்.

திருப்பூர் தென்னம்பாளையம் உழவர் சந்தையில் பொங்கலூர், பல்லடம், அவிநாசி உள்ளிட்ட சுற்றுவட்டாரப் பகுதி விவசாயிகள் நேரடியாக காய்கறி விற்பனை செய்து வருகின்றனர். அதற்காக, உழவர் சந்தையில் 80 விவசாயிகள் அமர்ந்து வியாபாரம் செய்யும் வகையில் விற்பனை மேடை அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் செவ்வாய்க்கிழமை அதிகாலை தென்னம்பாளையம் உழவர் சந்தையில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது, பெரும்பாலான விவசாயிகள் மேடையில் இடமின்றி கீழே அமர்ந்து வியாபாரம் செய்தது தெரிவந்தது. மேலும், அங்கிருந்த தராசுகள் அனைத்தும் மிகவும் பழுதடைந்த சரியான எடைகள் காட்டாமலும் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதுகுறித்து விவசாயிகள் பலர் அமைச்சரிடம் கூறுகையில், அதிகப்படியான விவசாயிகள் காய்கறிகள் விற்பனை செய்யும் வகையில் உழவர் சந்தையை விரிவுபடுத்தவும், தவறான எடை காட்டும் தராசுகளை மாற்றிவிட்டு புதிய தராசுகளை பெற்றுத் தரவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உழவர் சந்தையில் குடிநீர் வசதிகள், மின்விளக்குகள் வசதியும் போதிய அளவில் இல்லை. அவற்றையும் செய்துதருவதுடன், அதிகாலை நேரங்களில் மின்தடை ஏற்படுவதை தவிர்க்க வேண்டும். அடிப்படை வசதிகளை மேம்படுத்தி மின்தடையின்போது ஜெனரேட்டர் வசதி ஏற்படுத்தவும் வேண்டும். தவிர, உழவர் சந்தைக்கு வந்து செல்லும் பாதையை ஆக்கிரமித்து வியாபாரிகள் கடை அமைத்துள்ளதே அப்புறப்படுத்தவும், அடையாள அட்டை இல்லாமல் விவசாயிகள் பலர் விற்பனை செய்துவருவதாகவும் தெரிவித்தனர்.

விவசாயிகளின் கோரிக்கைகளை கேட்டறிந்த அமைச்சர், இப்பிரச்னைக்கு விரைவில் தீர்வு கிடைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அடையாள அட்டை இல்லாமலும், வியாபாரிகளிடம் பணம் வாங்கிக்கொண்டு உழவர் சந்தையில் காய்கறி விற்க அனுமதிப்பவர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். ஆய்வின் போது மாவட்ட ஆட்சியர் சி.சமயமூர்த்தி, மேயர் க.செல்வராஜ் உள்ளிட்டோர் உடன் சென்றனர்.

### ராமநாதபுரத்தில் பிப். 23 விவசாயிகள் குறைதீர் கூட்டம்

First Published : 17 Feb 2010 05:12:21 AM IST

ராமநாதபுரம், பிப். 16: வரும் 23-ம் தேதி (செவ்வாய்க்கிழமை) ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், ஆட்சியர் த.ந. ஹரிஹரன் தலைமையில் காலை 10.30 மணிக்கு விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் விவசாயிகளும் விவசாய சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு,வேளாண்மை

சம்பந்தப்பட்ட பொருள்களை பற்றி மட்டுமே விவாதிக்குமாறும், ஆட்சியர் அலுவலகம் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்  தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஆக்கிரமிப்பால் "மூழ்கும்' குளம்

First Published : 17 Feb 2010 04:07:14 AM IST

பாவூர்சத்திரம்,  பிப். 16: கீழப்பாவூர் பெரிய குளத்தில் அமலைச் செடிகள் ஆக்கிரமித்துள்ளதால் அதனை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுப் பணித் துறையினருக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாவூர்சத்திரம் அருகேயுள்ள கீழப்பாவூரில் பெரியகுளம்  அமைந்துள்ளது. இந்த குளத்துப் பாசனம் மூலம் ஆயிரக்கணக்கான விளைநிலங்கள் பாசன வசதி பெறுகிறது. அத்துடன் ஆண்டுக்கு இரண்டு முறை இக் குளம் பெருகிவிடுகிறது. பருவமழை நேரத்தில் ஒருமுறையும், குற்றால சீசன் நேரத்தில் ஒருமுறையும் நிரம்பி வருகிறது. இதனால், இந்தப் பகுதியில் விவசாயம் செழிப்பாகவே காணப்படுகிறது.

பழைய குற்றால அருவி மூலம் வரும் தண்ணீர், சிற்றாறு பாசனக் கால்வாய் வழியாக மேலப்பாவூர் குளத்திற்கு தண்ணீர் வருகிறது. பின்னர் அந்தக் குளம் நிரம்பியவுடன், பெரியகுளத்திற்கு தண்ணீர் வருகிறது.

இப்படி  வரும் வெள்ளத்தால் குளம் நிரம்பியவுடன் சில நாள்களிலேயே தண்ணீர் வற்றிவிடுகிறது. இதற்கு  குளத்தில் அமலைச் செடிகளின் அதிகரிப்புதான் காரணம்.

அத்துடன் குளத்திற்கு தண்ணீர் வரும் சிற்றாறு பாசன கால்வாயிலும் அமலைச் செடிகள் அதிகமாக உள்ளது. இதனால் வெள்ளப் பெருக்கு காலங்களில் தண்ணீர்  அதிகமாக வரும் போது அமலைச் செடிகள் தண்ணீர் போக்குவரத்திற்கு தடை ஏற்படுத்துகிறது. இதனால், கால்வாயில் அதிகமான இடங்களில் உடைப்பு ஏற்படுகிறது.

எனவே, சிற்றாறு கால்வாய் மற்றும் பெரியகுளத்துப் பகுதியில்  உள்ள அமலைச் செடிகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் சார்பில் கீழப்பாவூர் பேரூராட்சித் தலைவர் பொன். அறிவழகன் பொதுப் பணித்துறைக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

### பவானிசாகர் அணை நீர்மட்டம்

First Published : 17 Feb 2010 12:44:27 AM IST

ஈரோடு, பிப். 16: வானிசாகர் அணை நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை 81.73 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,267 கன அடி வீதம் தண்ணீர் வந்தது.ஆற்றில் விநாடிக்கு 550 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. பாசன வாய்க்காலில் தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டுள்ளது. அணை நீர் இருப்பு 16.62 டிஎம்சி.

### நாகர்கோவிலில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி ஊழியர்கள் தர்னா

First Published : 17 Feb 2010 04:01:38 AM IST

நாகர்கோவில், பிப்.16: கன்னியாகுமரி மாவட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தினர் நாகர்கோவிலி0ல் செவ்வாய்க்கிழமை தர்னா போராட்டத்தில் ஈடுபட்டனர். நாகர்கோவிலில் கூட்டுறவுத் துறை மண்டல இணைப் பதிவாளர் அலுவலகம் முன் நடைபெற்ற இந்த போராட்டத்துக்கு சங்கத் தலைவர் எம். அமிர்தலிங்கம் தலைமை வகித்தார். மாவட்ட கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு அமைப்பாளர் எம். துரைசாமி முன்னிலை வகித்தார். போராட்டத்தை அதிமுக அமைப்புச் செயலர் என். தளவாய்சுந்தரம் தொடங்கி வைத்தார். இதில் வலியுறுத்தப்பட்ட கோரிக்கைகள்:அரசு அறிவித்துள்ள விவசாய நகைக் கடன் தள்ளுபடி சம்பந்தமாக தொடக்க வங்கி ஊழியர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை உடனே கைவிட வேண்டும். கூட்டுறவுத் துறை அதிகாரிகளால் வேண்டுமென்றே மறுக்கப்பட்ட நகைக் கடன் தள்ளுபடி தொகையை பெற்றுத் தர உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாய நகைக் கடன் தள்ளுபடி தொகை மறுப்பதற்கு காரணமாக இருந்த மண்டல இணைப் பதிவாளர் மற்றும் தக்கலை சரக துணைப் பதிவாளர் மற்றும் அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி நகர கூட்டுறவு வங்கி ஊழியர் சங்க பொதுச்செயலர் பி. கல்யாணசுந்தரம், மாவட்ட வங்கி ஊழியர் சங்க பொதுச்செயலர் டி. சிதம்பரம், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர் சங்க பொதுச்செயலர் டி. சுரேஷ், நகர கூட்டுறவு வங்கி வங்கி ஊழியர் சங்க பொதுச்செயலர் டி. கிருஷ்ணபிள்ளை, கூட்டுறவு வீட்டுவசதி பணியாளர் சங்க பொதுச்செயலர் பங்கிராஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மாவட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி ஊழியர் சங்க பொதுச்செயலர் டி.ஸ்ரீமுருகன் முடித்து வைத்தார். சி. சுந்தரவேல் நன்றி கூறினார்.

### கரூர் உழவர் சந்தையில் வேளாண் இணை இயக்குநர் ஆய்வு

First Published : 17 Feb 2010 06:47:39 AM IST

கரூர், பிப். 16: கரூர் உழவர் சந்தையில் வேளாண் இணை இயக்குநர் (வேளாண் வணிகம்) ச. வேலாயுதம் திங்கள்கிழமை ஆய்வு நடத்தினார். உழவர் சந்தையின் சிறப்பு அம்சங்கள், சந்தையின் செயல்பாடுகள், தேவைகள் குறித்து அவர் ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து சந்தையில் காய்கறிகளை விற்பனை செய்யும் விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்தார். காய்கறி வாங்க வந்திருந்த பொதுமக்களிடம் சந்தையில் விற்பனை செய்யப்படும் விலை, தரம் குறித்து வேளாண் இணை இயக்குநர் கேட்டறிந்தார்.

அதேபோல, சுய உதவிக் குழுவினரால் விற்பனை செய்யப்படும் ஆங்கில காய்கறிகளின் விற்பனையையும் வேலாயுதம் ஆய்வு செய்தார்.

அப்போது, கரூர் உழவர் சந்தையில் நாள்தோறும் 23.5 டன் காய்கறிகள் விற்பனை செய்யப்படுகிறது. 184 விவசாயிகள் 2.80 லட்சம் ரூபாய் மதிப்புள்ள காய்கறிகளை விற்பனை செய்வதாகவும், சுமார் 4700 நுகர்வோர் வந்து செல்வதாகவும் மாவட்ட வேளாண் துணை இயக்குநர் மா. முத்துசாமி தெரிவித்தார்.

ஆய்வின்போது வேளாண் அலுவலர் ரா. ராஜேந்திரன், உதவி வேளாண்மை அலுவலர்கள் ம. மகாவிஷ்ணன், கு. கொளஞ்சி ஆகியோர் உடனிருந்தனர்.

**கரும்புக்கான ஆதார விலை: ஜெயலலிதா விளக்கம்**

First Published : 16 Feb 2010 03:03:58 PM IST

Last Updated : 16 Feb 2010 03:12:30 PM IST



சென்னை, பிப்.16- கரும்புக்கான ஆதார விலை மற்றும் சர்க்கரை உற்பத்தி குறித்து முதல்வர் கருணாநிதி தெரிவித்த கருத்துக்களுக்கு அதிமுக பொதுச்செயலர் விளக்கம் அளித்துள்ளார்.இதுதொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:கரும்பு விவசாயிகளுக்கான ஆர்ப்பாட்டம் குறித்து 5.2.2010 அன்று நான் வெளியிட்ட அறிக்கையினை முழுவதுமாக படிக்காமல் அறிக்கை வெளியிட்டிருக்கிறார் முதல்வர் கருணாநிதி.

மாநில அரசு ஆதார விலையை அறிவிக்கக் கூடாது என தென்னிந்திய சர்க்கரை ஆலை அதிபர்கள் சங்கம் சென்னை உயர் நீதிமன்றத்திலும், பின்னர் உச்ச நீதிமன்றத்திலும் வழக்கு தாக்கல் செய்து தடையாணை பெற உதவியாக இருந்த கருணாநிதி, 2004 ஆம் ஆண்டு வரை எனது ஆட்சிக் காலத்தில் கரும்புக்கான ஆதார விலை உயர்த்தப்படவில்லை என்று கூறுவது கதையாக இருக்கிறது.

உண்மை நிலை என்னவென்றால், எனது ஆட்சிக் காலத்தில் எடுக்கப்பட்ட முயற்சியின் காரணமாக, தடையாணை விலக்கிக் கொள்ளப்பட்டதோடு மட்டுமல்லாமல், மாநில அரசு பரிந்துரை விலையை அறிவிக்கலாம் என்ற உத்தரவும் 2004 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பினையடுத்து, மத்திய அரசின் குறைந்த பட்ச ஆதார விலையான 795 ரூபாயுடன், மாநில அரசின் ஆதார விலையான 219 ரூபாயையும் சேர்த்து, கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1,014 ரூபாய் வழங்க உத்தரவிடப்பட்டது. இதே போன்று, வாகன வாடகையை வழங்கவும் ஆலை நிர்வாகங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டன.

அப்பொழுதே “தனியார் ஆலைகளிலே தர முடியுமா? தனியார் ஆலைகளிலே தருவதற்கு அரசு வலியுறுத்துமா?” என்றெல்லாம் கூறி திசை திருப்பும் முயற்சியில் ஈடுபட்டவர் கருணாநிதி.

அடுத்தபடியாக, 2005-2006 ஆம் ஆண்டு மத்திய அரசு நிர்ணயம் செய்த விலை 795 ரூபாய் என்றும், தமிழக அரசினால் கூடுதலாக ரூ. 642.40 சேர்த்து ரூ. 1,437.40 வழங்கப்படுவதாகவும் முதல்வர் கருணாநிதி அறிவித்து இருக்கிறார்.

தமிழக அரசு செய்தி வெளியீடு எண். 647 நாள் 24.9.2009-ல் மத்திய அரசு சட்டப்பூர்வ விலையாக

ரூ. 1,077.60 என்று அறிவித்துள்ளதாகவும், மாநில அரசின் பரிந்துரை விலையான ரூ. 359.80-ஐயும் சேர்த்து ஒரு டன் கரும்புக்கு ரூ. 1,437.40 வழங்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது மத்திய அரசின் ஆதார விலை

1,077.60 என்றும், மாநில அரசின் ஆதார விலை ரூ. 359.80 என்றும் தமிழக அரசின் செய்தி வெளியீட்டிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மாநில அரசின் ஆதார விலையான ரூ. 359.80-ல் எனது ஆட்சிக் காலத்தில் அறிவிக்கப்பட்ட ஆதார விலையான ரூ.219-ம் அடக்கம். இதன் பிறகு மத்திய அரசு, தனது நுகர்பொருள் விவகாரம், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின் 31.10.2009 கடிதத்தின் மூலம் கரும்புக்கான நியாய மற்றும் ஆதார விலையை ரூ. 1,298.40 என்று உயர்த்தி அறிவித்தது. இதனுடன் மாநில அரசின் ஆதார விலையான ரூ. 359.80-ஐயும் சேர்த்து கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 1,658.20 வழங்க வேண்டும்.

ஆனால், கருணாநிதியின் கூற்றுபடியே ரூ. 1,437.40 தான் வழங்கப்படுகிறது. அதாவது, மத்திய அரசின் ஆதார விலையான ரூ. 1,298.40 உடன் மாநில அரசின் ஆதார விலையாக ரூ. 139 மட்டுமே வழங்கப்படுகிறது. அதாவது, எனது ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்ட மாநில அரசின் ஆதார விலையான ரூ. 219-ஐ விட 80 ரூபாய் குறைவு. இதைத்தான் நான் விழுப்புரத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் சுட்டிக் காட்டினேன். கரும்புக்கான ஆதார விலை குறித்த விவரத்தையே புரிந்து கொள்ளாமல் அறிக்கை விட்டிருக்கிறார் கருணாநிதி.

சர்க்கரை உற்பத்தியை பொறுத்த வரையில், 2003-2004 ஆம் ஆண்டில் 9.20 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்ததையும், 2004-05 ஆம் ஆண்டு 11.09 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்ததையும் நான் மறைத்துவிட்டதாக கருணாநிதி கூறியிருக்கிறார். இது போன்ற குறைவான உற்பத்திக்கு, 1996-2001 ஆம் ஆண்டைய கருணாநிதி ஆட்சியின் தாக்கம் தான் காரணம் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பின்னர், 2005-2006 ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு 21.38 லட்சம் மெட்ரிக் டன் ஆக உயர்ந்தது. 2006-2007 ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு 25.39 லட்சம் மெட்ரிக் டன் ஆகும்.

எனது ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பான நடவடிக்கைகள் காரணமாக, சர்க்கரை உற்பத்தி 2006-2007 ஆம் ஆண்டு அதிகரித்து இருக்கிறது. பின்னர், 2007-2008 ஆம் ஆண்டு சர்க்கரை உற்பத்தி 21.41 லட்சம் மெட்ரிக் டன்னாகவும், 2008-2009 ஆம் ஆண்டு சர்க்கரை உற்பத்தி 16.16 லட்சம் மெட்ரிக் டன்னாகவும் குறைந்து இருக்கிறது. இதிலிருந்து, எனது ஆட்சிக் காலத்தில் ஏறுமுகத்தில் இருந்த சர்க்கரை உற்பத்தி, கருணாநிதி ஆட்சிக் காலத்தில் இறங்குமுகத்தில் சென்று கொண்டிருப்பதை யாரும் எளிதில் புரிந்து கொள்ளலாம்.

எனது தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் வெள்ளத்தையும், பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மத்தியில் எனக்குள்ள ஆதரவையும், வரவேற்பையும் கண்டு இதுபோன்ற அறிக்கையை முதல்வர் கருணாநிதி வெளியிட்டிருக்கிறார். இவ்வாறு ஜெயலலிதா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## புதுகையில் பிப்.19-ல் விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம்

First Published : 17 Feb 2010 06:52:56 AM IST

புதுக்கோட்டை, பிப். 16: புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் வெள்ளிக்கிழமை (பிப். 19) நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) பி. ராஜு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

""புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் ஆ. சுகந்தி தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் பிப். 19-ம் தேதி காலை 10.30 மணியளவில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் பல துறை அலுவலர்களும் பங்கேற்கவுள்ளனர். ஆகையால், விவசாயிகள் இக்கூட்டத்தில் தவறாது கலந்துகொண்டு விவசாயம் தொடர்பான தங்கள் குறைகளையும் கோரிக்கைகளையும் தெரிவித்து பயன் பெறலாம்."

**ராமநாதபுரத்தில் பிப். 23 விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

First Published : 17 Feb 2010 05:12:21 AM IST

ராமநாதபுரம், பிப். 16: வரும் 23-ம் தேதி (செவ்வாய்க்கிழமை) ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், ஆட்சியர் த.ந. ஹரிஹரன் தலைமையில் காலை 10.30 மணிக்கு விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் விவசாயிகளும் விவசாய சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு,

வேளாண்மை சம்பந்தப்பட்ட பொருள்களை பற்றி மட்டுமே விவாதிக்குமாறும், ஆட்சியர் அலுவலகம் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கோடைக்கு இதமாக குவியும் தர்பூசணி**

First Published : 17 Feb 2010 01:15:19 AM IST

பொன்னேரி, பிப். 16: "கோடை வரும் பின்னே தர்பூசணி வரும் முன்னே' என கூறும் வகையில் வெயிலின் தாக்கத்தைத் தணிக்க இயற்கையின் கொடையாக உள்ள தர்பூசணி பழங்கள் பொன்னேரி பகுதியில் மலை போல் குவிக்கப்பட்டுள்ளன.

÷சுனாமிக்கு பின் ஏற்பட்டுள்ள பருவநிலை மாற்றம் காரணமாக தைமாதம் பிறந்தும் கடும் குளிர், குளிர்ந்த காற்று ஆகியவை பொதுமக்களை பெரிதும் வாட்டி எடுத்தது. ÷இந்நிலையில் மாசி மாதம் முதல் தேதி மகாசிவராத்திரி முதல் குளிர் விலக தொடங்கி பகலில் வெயில் காய தொடங்கியுள்ளது.

÷இதன் காரணமாக லேசான புழுக்கமும் ஏற்பட தொடங்கியுள்ளது இது கோடை காலம் தொடங்குவதற்கு உண்டான அறிகுறியாக உள்ளது என்பதை உணர்ந்த சாலையோர வியாபாரிகள் உடனடியாக வெளியூர்களில் இருந்து தர்பூசணி பழங்களை வாங்கி வந்து பொன்னேரி ஹரிஹரன் பஜார், திருவொற்றியூர் நெடுஞ்சாலை ஆகிய இடங்களில் மலை போல் கொட்டியுள்ளனர்.

÷கோடை காலம் ஆரம்பிக்கும் மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் மட்டுமே தர்பூசணி பழங்கள் விற்பனைக்கு வரும்.

ஆனால் தற்போது ஒரு மாதத்திற்கு முன்னமே தர்பூசணி பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளதால் கோடை காலம் இப்பொழுதே தொடங்கியதை போன்ற உணர்வு ஏற்படுவதாக அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

### நீடாமங்கலத்தில் 5 நாள் தொழில்நுட்ப வார விழா தொடக்கம்

First Published : 16 Feb 2010 09:51:00 AM IST

Last Updated : 16 Feb 2010 11:06:13 AM IST

நீடாமங்கலம், பிப். 15: திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் 5 நாள் தொழில் நுட்ப வார விழா திங்கள்கிழமை தொடங்கியது. தொடக்க விழாவில், தலைமை வகித்து கோவை வேளாண் பல்கலைக்கழக விரிவாக்க கல்வி இயக்குநர் முனைவர் பா. கலைச்செல்வன் பேசியது:

விவசாயிகள் தங்களின் விளைபொருள்களின் உற்பத்தியில் முனைப்பு காட்டுவதோடு, அவற்றை சந்தைப்படுத்துதலிலும் முனைப்பு காட்ட வேண்டும். அதிக அளவிலான விளைபொருள் உற்பத்தியோடு விவசாயிகள் நின்றுவிடாமல், ஒருங்கிணைந்த பண்ணைய முறைகளுக்கும் விவசாயிகள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றார்.

ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் முனைவர் த. ஜெயராஜ் பேசியது: விவசாயிகள் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில் நுட்பங்களை ஒரே இடத்தில் பெற வேண்டும் என்ற எண்ணத்திலேயே இதுபோன்ற தொழில்நுட்ப வார விழாக்கள் நடத்தப்படுகின்றன.விவசாயிகள் இதுபோன்ற நிகழ்ச்சிகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

செம்மைநெல் சாகுபடி, பண்ணை இயந்திர மயமாக்கல், ஒருங்கிணைந்த பண்ணையம், பயிர் மேலாண்மை, பயிர் பாதுகாப்பு, துல்லிய பண்ணையம், மாற்றுப் பண்ணையம் போன்ற தலைப்புகளில் கருத்தரங்கமும், செயல் விளக்கங்களும்,கருத்துப் பரிமாற்றம் செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றார்.

பெங்களூர் முதுநிலை வேளாண் விஞ்ஞானி ச.வை. சாய்ராம், திருவாரூர் வேளாண் இயக்குநர் அன்பழகன், தோட்டக் கலை துணை இயக்குநர் க. இளங்கோவன் உள்ளிட்டோரும் பேசினர். வேளாண் தொடர்பான கருத்துக் காட்சிகளும் இடம் பெற்றுள்ளன.முன்னதாக நிலையத் தலைவர் தி. செங்குட்டுவன் வரவேற்றார். நிறைவில் இணைப் பேராசிரியர் முனைவர் அ. பவுன்ராஜ் நன்றி கூறினார்.

தினமலர்

### நீண்ட இடைவெளிக்கு பின்உப்பு உற்பத்தி தொடக்கம்



ராமநாதபுரம்:புயல், மழை என நீண்ட நாட்களுக்கு பின், கடலோர பகுதிகளில் உப்பு உற்பத்தி துவங்கியுள்ளது.கடலோர பகுதிகளான ராமநாதபுரம், தூத்துக்குடி பகுதிகளில் உப்பு உற்பத்தி அதிக அளவில் நடந்து வருகிறது. பருவ மழை, பனிகாலங்களில் உப்பு உற்பத்தி தற்காலிகமாக நிறுத்தப்படுவது வழக்கம். இம்முறை பருவ மழை பொய்த்ததால், வழக்கத்துக்கு மாறாக உப்பளங்களில் பணிகள் தொடர்ந்து நடந்து வந்தன. எதிர்பாராத வகையில் வங்கக்கடலில் எழுந்த புயல் சின்னம் காரணமாக, நவ.,-டிச.,ல் உப்பளங்களில் நீர் தேங்கி பெரும் நஷ்டம் ஏற்பட்டது. அறுவடைக்கு தயாராக இருந்த உப்புகள் கரைந்தன. இதைத் தொடர்ந்து உப்பு உற்பத்தி நிறுத்தப்பட்டது.

"ஜிப்சம்' உற்பத்தி மட்டுமே நடந்து வந்த நிலையில், ஜனவரியில் உப்பு உற்பத்தியை துவக்க முயன்ற போது, பனிப்பொழிவு கடுமையாக இருந்தது. இதனால் அந்த முயற்சியும் கைவிடப்பட்டது. இதனால், உப்பு தட்டுப்பாடு அபாயம் ஏற்பட்டது. இந்நிலையில், கடலோர பகுதிகளில் வெயில் கடுமையாக உள்ளது. இதைத் தொடர்ந்து, உப்பளங்களில் மூன்று மாதங்களுக்கு மேலாக தடைபட்ட பணிகள் மீண்டும் தொடர்ந்துள்ள நிலையில், வெளியூர்களுக்கு உப்புகளை அனுப்பும் பணிகள் ஜரூராக நடந்து வருகின்றன.

### பி.டி., கத்தரிக்காய் ஆரோக்கியத்திற்கு ஆபத்து: கனடா விஞ்ஞானி எச்சரிக்கை

பிப்ரவரி 17,2010,00:00

சென்னை:""பி.டி., கத்தரிக்காய் பயிரிட்டால் மண்ணின் வளம் கெடுவதுடன், மற்ற பயிர்கள், உயிரினங்களை அழித்து, மனித ஆரோக்கியத்தையும் கெடுக்கும்,'' என, கனடா நாட்டு விஞ்ஞானி ஷிவ் சோப்ரா தெரிவித்தார்.மரபணு மாற்றத்திற்கு எதிரான தென்னகம் - தமிழ்நாடு பிரிவு மற்றும் தமிழ்நாடு பெண்கள் இணைப்புக் குழுவின் சார்பில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவுப் பொருட்களினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த விளக்கக் கூட்டம் சென்னையில் நேற்று நடந்தது.

இக்கூட்டத்தில், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கனடா நாட்டு விஞ்ஞானி ஷிவ் சோப்ரா பேசியதாவது:பி.டி., என்பது, "பேசில்லஸ் துரிஞ்சியாசிஸ்' எனும் பாக்டீரியாவாகும். இதனால், மண்ணின் வளம் கெடுவதுடன், மற்ற பயிர்களும் பாதிக்கப்படும், மண்ணில் உள்ள உயிரினங்கள் அழிந்து அவற்றை சார்ந்துள்ள மற்ற உயிரினங்களும் அழிந்துவிடும்.மரபணு மாற்றம் என்பது மனிதனுக்கு இன்சுலின் தயாரிப்பது போன்ற சில விஷயங்களில் மட்டும் நன்மையை தருகிறது. பி.டி., கத்தரிக்காய் பயிரிடப்படும் போது கத்தரிக்காய் சார்ந்த பயிர்க் குடும்பத்தில் அனைத்து பயிரினங்களும் பாதிக்கப்படுகின்றன.மரபணு மாற்றப்பட்ட பொருட்களை கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகள் தங்கள் நாடுகளில் கொண்டு வருவதை எதிர்த்து வருகின்றன. மனித உடலுக்கு தீங்கு விளைவிக்காது என நிரூபிக்கப்பட்ட பின்பு தான் கொண்டு வரவேண்டும் என்பதில் உறுதியாக உள்ளன.

இந்தியாவில் மத்திய அமைச்சர் ஜெய்ராம் ரமேஷும் இக்கருத்தை வலியுறுத்தியுள்ளார். வரும் 22ம் தேதி இந்திய பார்லிமென்டில், "உயிர் தொழில்நுட்ப ஒழுங்கு முறை ஆணையம்' குறித்த சட்ட மசோதா ஒன்று கொண்டு வரப்படுகிறது. உயிர் தொழில்நுட்பம் என்பது இங்கு மரபணு மாற்றத்தையே குறிக்கிறது. மறைமுகமாக கொண்டு வரப்படும் இந்த சட்ட மசோதாவின் மூலம் புதிய துறை அமைக்கப்பட்டு, அதன் கீழ் ஆராய்ச்சிகள், ஆய்வுகள் நடத்த அனுமதி அளிக்கப்படுகிறது.இது அமலுக்கு வரும் பட்சத்தில், மரபணு மாற்றத்தினால் ஏற்படும் கேடு குறித்து பேசினாலே அது குற்றமாக கருதப்பட்டு, ஆறு மாத சிறை தண்டனை அளிக்க வழிவகை உள்ளது.

இந்த துறையின் அதிகாரிகள் நினைத்தால் எந்நேரமும் விவசாய நிலங்களை சோதனை செய்யும் அதிகாரமும், ஆணையத்தின் சட்டங்களுக்கு எதிராக செயல்பட்டால் தண்டனை வழங்கும் அதிகாரமும் அளிக்கப்படுகிறது. இதை எதிர்த்து விவசாயிகள் கோர்ட்டுக்கும் செல்ல முடியாது.இவ்வாறு ஷிவ் சோப்ரா பேசினார்.நிகழ்ச்சியில், இயற்கை வேளாண் பேராசிரியர் நம்மாழ்வார், தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழுவின் தலைவர் ஷீலு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### விவசாயிகளை பாதுகாக்க புது திட்டம்

விருதுநகர் :விவசாயிகளை நஷ்டத்திலிருந்து பாதுகாக்க அரசு புதிய திட்டத்தை செயல்படுத்த உள்ளது. மாவட்டம் தோறும் விவசாயிகளுக்கு, விவசாயம் சார்ந்த  அனைத்து சட்டப்பாதுகாப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த பயிற்சி அளிக்கப்படுகிறது.

விவசாயிகள் விதைகள், இடுபொருள்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள், உரங்கள் வாங்கும் போது அதற்கான பில்லும், சம்பந்தப்பட்ட பொருளின் ரகம், காலாவதியான பொருளா? முளைப்பு திறன் ஆகியவற்றை சோதனை செய்து வாங்க வேண்டும். இதன்பின், அந்த பொருளை பயன்படுத்தியதில் நஷ்டம் ஏற்பட்டால் நுகர்வோர் குறைதீர் மன்றத் தில் எப்படி புகார் செய்ய வேண்டும். பாதிப்புக்கு வழங்கப்படும் தீர்ப்புகள் ஆகியவை குறித்தும் விளக்கமளிக்கப்படுகிறது.மாவட்டங்களில், விவசாய இணை இயக்குனர், உழவர் பயிற்சி மைய துணைஇயக்குனர், நுகர்வோர் அமைப்பின் மாநில தலைவர் உட்பட அதிகாரிகள் பிப்., 18, 25 ஆகிய தேதிகளில் பயிற்சி அளிக்கின்றனர். பயிற்சி பெற்ற விவசாயிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது.

### நெகமம் கொப்பரை கிலோ 31.25 ரூபாய்

பொள்ளாச்சி : நெகமம் சுற்றுப்பகுதி விவசாயிகள் 13 பேர், ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்திற்கு 69 மூட்டை கொப்பரையை கொண்டு வந்தனர். மொத்தம் ஐந்து வியாபாரிகள் கொப்பரையை தரம் பிரித்து ஏலம் கூறினர். ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சண்முகம் ஏலம் நடத்தினார்.முதல் தர கொப்பரை 29 மூட்டையில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 29.05 ரூபாய் முதல், அதிகபட்சம் 31.25 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 40 மூட்டையில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 23.25 ரூபாய் முதல், அதிகபட்சம் 28.40 ரூபாய் வரை விலை கிடைத்தது. அதிகாரிகள் கூறுகையில், "வெளிமார்க்கெட்டில் கொப்பரை விலை தொடர்ந்து குறைந்து வருவதால், நெகமம் ஏலத்தில் இந்தவாரம் கொப்பரை வரத்து குறைவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது கொப்பரை கிலோவுக்கு 2.35 ரூபாய் விலை குறைந்துள்ளது' என்றனர்.

### இடுபொருள் விற்பனையாளர் சங்க பொதுக்குழு கூட்டம்

கோவை : கோவை மாவட்ட வேளாண் இடுபொருள் விற்பனையாளர்கள் சங்க பொதுக்குழு கூட்டம், சாய்பாபாகாலனியில் நடந்தது.சங்க துணைத்தலைவர் அன்பழகன் வரவேற்றார். மாநில தலைவர் விஜய்நடராஜ் தலைமை வகித்தார். செயலாளர் அப்புக்குட்டி ஆண்டறிக்கை வாசித்தார். பொருளாளர் ராஜேந்திரன் வரவு,செலவு கணக்கு சமர்ப்பித்தார்.விவசாயிகளுக்கு டை அமோனியம் பாஸ்பேட் உரங்கள் வேளாண் இடுபொருள் விற்பனையாளர்கள் மூலம் வினியோகிக்கப்பட்டு வந்தது. இப்போது,கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்கப்படுகிறது. டை அமோனியம் பாஸ்பேட் உரங்களை, இடுபொருள் விற்பனையாளர்கள் மூலம் வினியோகிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.மாநில செயலாளர் சீத்தாராமன், மாநில பொருளாளர்

சண்முகநாதன், இணைச்செயலாளர்கள் மோகனகிருஷ்ணன், நல்லசாமி, துணைத்தலைவர் செல்வராஜ் உட்பட பலர் பங்கேற்றனர். இணைச்செயலாளர் பாண்டியன் நன்றி கூறினார்.

**பொள்ளாச்சி, உடுமலை பகுதியில் மாவுப்பூச்சி தாக்குதல்**

முதலில் பப்பாளி மரத்தில் ஏற்பட்டது. தற்போது அனைத்து காய்கறி பயிர்களிலும் மாவுப்பூச்சி பரவியுள்ளது. ரோட்டோரத்தில் உள்ள செடிகளிலும் மாவுப்பூச்சி உள்ளது.ஊராட்சி தலைவர் மூலம் மாவுப்பூச்சி பாதிப்பு பற்றி அறிக்கை கேட்டுள்ளோம். பாதிப்பு பரப்பை சரியாக தெரிவித்தால் தான் அதிக நிதி பெற்று மருந்து தெளிக்க முடியும்.இவ்வாறு வேளாண்மை உதவி இயக்குனர் தெரிவித்தார்.

**விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

பொள்ளாச்சி : பொள்ளாச்சி தெற்கு வேளாண் துறை சார்பில் நீர்வள - நிலவள திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது.வேளாண்மை துறை, தோட்டகலைத்துறை, கால்நடை பராமரிப்பு துறை, வேளாண்மை பொறியியல் துறை, பொதுப்பணித்துறை ஆகிய துறைகளை சேர்ந்த அதிகாரிகள் பங்கேற்றனர்.
வேளாண்மை துறை உதவி இயக்குனர் மோகனசுந்தரம் முகாமை துவக்கி வைத்து, நீர்வள-நிலவள திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களான நிலக்கடலை, பயிறு வகை செயல் விளக்க திடல்கள் அமைக்கும் தொழில்நுட்பம் குறித்து விளக்கினார்.

கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் டாக்டர் நாகராஜ், ""பால் உற்பத்தியில் தமிழகம் முன்னேறி வருகிறது. கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களை கண்டறிந்து அவற்றுக்கு சரியான சிகிச்சை அளிக்க வேண்டும். கோமாரி நோய்க்கு முன்னெச்சரிக்கையாக தடுப்பூசி போட வேண்டும்" என்றார். வேளாண் பொறியியல் துறை உதவி பொறியாளர் நாகேஷ் பேசும் போது, ""சொட்டு நீர் பாசன திட்டத்திற்கு இந்தாண்டு 65 சதவீதம் மானியம் வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே சொட்டுநீர் பாசனம் அமைத்து ஐந்து ஆண்டுகளுக்கு மேலிருந்தால், வயல்களில் பழுதாகியிருக்கும் சொட்டு நீர் கருவிகளுக்கும் 65 சதவீதம் மானியம் அளிக்கப்படும்" என்றார்.வானிலை சார்ந்த பயிர்காப்பீட்டு திட்டம் குறித்து இப்கோ டோக்கியோ நிறுவனத்தை சார்ந்த அலுவலர் கண்ணன் பேசினார். தோட்டக்கலைத்துறை சார்பில் 10 விவசாயிகளுக்கு தக்காளி செயல்விளக்க திடல்களுக்கான இடு பொருட்கள் வழங்கப்பட்டது.

**பயறு உற்பத்தியை அதிகரிக்க மானியம் தேசிய வேளாண் திட்டத்தில் ரூ.27 லட்சம் ஒதுக்கீடு**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் பயறு வகை பயிர் உற்பத்தியை அதிகரிக்க தேசிய வேளாண் திட்டத்தின் கீழ் 27 லட்ச ரூபாய் மானிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து வேளாண் இணை இயக்குனர் முகமது அலி வெளியிட்ட அறிக்கை: தர்மபுரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் உளுந்து, பாசிப்பயறு மற்றும் காராமணி, துவரை ஆகிய பயறு வகை பயிர்களில் தெளிப்பு நீர் பாசனம் அமைக்க 50 சத மானியம் வழங்கப்படுகிறது. தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பயறு வகை உற்பத்தியை அதிகரிக்க 27 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதிகபட்சமாக ஒரு ஹெக்டேருக்க 7,500 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.

ஒரு விவசாயி 2 ஹெக்டேருக்கான மானியத்தை பெறலாம். இத்திட்டம் பயறு வகைப்பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் இத்திட்டம் 100 ஹெக்டேர் பரப்புக்கு செயல்படுத்தப்படுகிறது. பயறு வகை பயிர்களில் டை அம்மோனியம் பாஸ்பேட் (டி.ஏ.பி., ) உரம் இழைவழி தெளித்தல் திட்டத்தில் உளுந்து, பாசிப்பயறு மற்றும் காராமணி ஆகிய பயறு வகை

பயிர்களில் மண்ணின் ஈரம் குறைவாக இருக்கையில் மண்ணில் உரம் இடுவதை தவிர்க்கும் பொருட்டு பயறு வகை பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்க பூப்பருவத்திலும் அதனை தொடர்ந்து 15 நாள் இடைவெளியில் இரண்டாம் முறையும் ஒரு முறைக்கு 12.5 கிலோ வீதம் டி.ஏ.பி., உரத்தை மொத்தம் 25 கிலோவை காலை அல்லது மாலை வேளையில் இலை வழி தெளிக்க வேண்டும்.

இத்திட்டத்தில் ஒரு ஹெக்டேருக்கு மானியமாக 200 ரூபாய் வழங்கப்படுகிறது. தர்மபுரி மாவட்டத்தில் 1,500 ஹெக்டேர் இலக்கில் 3 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பயறு வகை பயிர்களில் உற்பத்தி பெருக்கம் செயல் விளக்கம், துவரை பயிரில் ஒரு ஹெக்டேர் செயல் விளக்க திடல் அமைத்தல் திட்டத்தில் பயறு வகைப்பயிர்களில் உற்பத்தியை அதிகரிக்க துவரை பயிரில் ஒரு ஹெக்டேருக்கு செயல்விளக்க திடல் அமைக்க ஒரு ஹெக்டேருக்கு 20,000 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. துவரை சாகுபடி பரப்பை அதிகரிக்கவும், மகசூலை அதிகரிக்கவும், தனிப்பயிராகவும், இறவை பயிராகவும் மேம்படுத்தப்பட்ட சாகுபடி தொழில் நுட்பங்களை பரவலாக்கவும் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் ஊட்டசத்து மேலாண்மையினை கடைபிடிக்கவும், தெளிப்பு நீர் பாசன முறையில் சாகுபடி செய்வதால், ஒட்டு மொத்த பயறு உற்பத்தியினை அதிகரிக்கவும் இத்திட்டம் தர்மபுரி மாவட்டத்தில் 80 ஹெக்டேரில் செயல்படுத்தப்படுகிது.

தனிப்பயிராக தெளிப்பு நீர் பாசனம் அமைத்து செயல் விளக்கம் அமைக்கும் விவசாயிக்கு ஒரு ஹெக்டேருக்கு 20,000 ரூபாயம் மானியம் வழங்கப்படுகிறது. இதில், 5,000 வரை விதை, உயிர் உரம், நுண்ணூட்டச்சத்து, ஜிப்சம், உரங்கள், உயிர் பூச்சிக்கொல்லிகள், பயிர் பாதுகாப்பு மருந்துகள், டி.ஏ.பி., இலை வளி தெளிப்பிற்கான உரம் ஆகிய ஈடுபொருட்கள் 15,000 ரூபாய்க்கு தெளிப்பு நீர் பாசனம் அமைத்து கொள்ளவும் மானியம் வழங்கப்படுகிறது. மேலும் விபரங்கள் பெற விரும்புவோர் சம்பந்தப்பட்ட வட்டார வேளாண் உதவி இயக்குனரை தொடர்பு கொண்டு இத்திட்டத்தின் பயன் பெறலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**கோபியில் காலிஃபிளவர் அறுவடை பெருமளவில் விலை குறைய வாய்ப்பு**

கோபிசெட்டிபாளையம்: கோபி பகுதியில் காலிஃபிளவர் அறுவடை துவங்கியுள்ளதால் பெருமளவில் விலை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. கோபி பகுதியில் பல ஆண்டுகளாக நெல், கரும்பு மற்றும் மஞ்சள் பயிரிட்டு வந்தனர். குறைந்த நாளில் அதிக லாபம் தரக்ககூடிய மற்றும் விவசாய கூலியாட்கள் அதிகம் தேவைப்படாத தோட்டக்கலை பயிர்களுக்கு விவசாயிகள் முக்கியத்துவம் தரத் துவங்கியுள்ளனர்.

நாள்தோறும் உணவில் இடம்பெற கூடிய கத்தரிக்காய், முள்ளங்கி, வெண்டைக்காய் மற்றும் காலிஃபிளவர் போன்ற பயிர்கள் அதிகளவில் பயிரிடப்பட்டு வருகிறது. கோபி, நம்பியூர், கடத்தூர், சிறுவலூர், கள்ளிப்பட்டி, துறையம்பாளையம், அத்தாணி, அரசூர், பாரியூர், வெள்ளாங்கோவில், பங்களாப்புதூர், குருமந்தூர், கொளப்பலூர், லக்கம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் விளையும் தோட்டக்கலை பயிர்கள் மொடச்சூர் உழவர் சந்தை மற்றும் கோபி தினசரி மார்க்கெட்டில் நாள்தோறும் விற்பனை செய்யப்படுகிறது. வழக்கமாக காலிஃபிளவர் ஊட்டியில் இருந்து அதிகளவில் கோபிக்கு கொண்டு வரப்படுகிறது. தற்போது கோபி மற்றும் சுற்று வட்டார பகுதிகளிலேயே அதிகம் சாகுபடி செய்யப்படுவதால், குறைவான விலைக்கு கிடைக்கிறது. கோபி பகுதியில் அறுவடை செய்யப்படும் காலிஃபிளவர் ஒன்று ஐந்து ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இன்னும் சிலர் மூன்று பூ பத்து ரூபாய்க்கு விற்கின்றனர். அறுவடை தீவிரமாக நடப்பதால் இன்னும் விலை சரிய வாய்ப்புள்ளது. கோபி பகுதியில் தோட்டக்கலைப் பயிர்கள் அதிகளவில் பயிரிடப்பட்டு விற்பனைக்கு கொண்டு வரப்படுவதால், வியாபாரிகள் வெளி மாவட்டத்தை நம்பியிருக்க வேண்டிய நிலை இல்லை. உள்ளூரில் விளையும் கத்தரிக்காய் உள்ளிட்ட காய்கறிகளை பொதுமக்களும் நாள்தோறும் ஃபிரஷ்ஷாக வாங்கி செல்கின்றனர்.

**வெல்லம், நாட்டு சர்க்கரை விலை பல மடங்கு குறைவு**

ஈரோடு: வடமாநில வியாபாரிகள் வரத்து குறைந்ததால் வெல்லம், நாட்டு சர்க்கரை விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளது. வெல்லம் மூட்டைக்கு 200 ரூபாய், நாட்டு சர்க்கரை மூட்டைக்கு 300 ரூபாய், அச்சு வெல்லம் மூட்டைக்கு 400 ரூபாய் குறைந்துள்ளது. ஈரோடு மாவட்டத்தில் முள்ளாம்பரப்பு, அம்மாபேட்டை, வடபழனி, பிழிக்கல்பாளையம் ஆகிய இடங்களில் வெல்லமும், கோபி, கவுந்தபாடி, அலங்கியம், பவானி ஆகிய இடங்களில் நாட்டு சர்க்கரையும் உற்பத்தி செய்யப்படுகிறது. இவை கவுந்தப்பாடி, சித்தோடு ஆகிய இரு சந்தைகளில் விற்பனை செய்யப்படுகிறது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வெல்லம் விலை மூட்டைக்கு 100 ரூபாய் வரை உயர்ந்தது. வடமாநிலங்களில் வெல்லம் தேவை அதிகரிப்பு காரணமாக வெல்லம் விற்பனை நன்றாக இருந்தது. சில வாரங்களாக வடமாநிலத்தை சேர்ந்த வியாபாரிகள் வரத்து நின்று விட்டது. வடமாநில வியாபாரிகள் வரத்து குறைந்ததாலும், தமிழகத்தில் வெல்லம் தேவை குறைந்த காரணத்தாலும் வெல்லம் விலை வீழ்ச்சி அடையத் துவங்கியது.

உருண்டை வெல்லம் மூட்டைக்கு 200 ரூபாய், நாட்டு சர்க்கரை மூட்டைக்கு 300 ரூபாய், அச்சு வெல்லம் மூட்டைக்கு 400 ரூபாய் வரை விலை குறைந்துள்ளது. 1,600 முதல் 1,650 ரூபாய்க்கு விற்கப்பட்ட 60 கிலோ மூட்டை நாட்டு சர்க்கரை 1,350 முதல் 1,400 ரூபாய், 900 முதல் 950 ரூபாய்க்கு விற்கப்பட்ட 30 கிலோ மூட்டை உருண்டை வெல்லம் 700 முதல் 750 ரூபாய், 1000 முதல் 1,100 ரூபாய் வரை விற்கப்பட்ட 30 கிலோ மூட்டை அச்சு வெல்லம் 700 முதல் 800 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. வெல்லம் விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால் வெல்ல உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வெல்லம் விற்பனையாளர் ஒருவர் கூறியதாவது: பொங்கலுக்கு வெல்லம் தேவை அதிகரிப்பதால் வெல்லம் விலை மீண்டும் உயர்ந்துள்ளது. வடமாநில வியாபாரிகள் அதிகம் வந்ததால் வெல்லம் விலை குறையாமல் இருந்தன. இந்தியா முழுவதும் வெல்லம் உற்பத்தி அதிகரித்துள்ளது. வடமாநில வியாபாரிகள் ஈரோடு மார்க்கெட்டுக்கு வரவில்லை. தமிழகத்திலும் வெல்லம் தேவை குறைந்து விட்டதால் வெல்லம் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**தெளிப்பு நீர்பாசனம் அமைக்க மானியம்**

மோகனூர்: "தெளிப்பு நீர்பாசனம் அமைக்க ஒரு ஹெக்டேருக்கு 7,500 ரூபாய் (50 சதவீதம்) மானியம் வழங்கப்படுகிறது' என, மோகனூர் வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ தெரிவித்துள்ளார். அவரது அறிக்கை:
வேளாண் துறையில் மோகனூர் வட்டாரத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயறு வகை மற்றும் எண்ணெய் வித்து பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தெளிப்பு நீர்பாசனம் அமைக்க ஒரு ஹெக்டேருக்கு 7,500 ரூபாய் (50 சதவீதம்) மானியம் வழங்கப்படுகிறது. அதில் பயனடைய விரும்பும் விவசாயிகள் சிட்டா, அடங்கல் மற்றும் நிலை வரைபடம் ஆகிய ஆவணங்களுடன் வட்டார வேளாண் மையத்தை அணுகி பயன்பெறலாம்

**விவசாயிகளுக்கு விழிப்புணர்வு 18, 25 தேதிகளில் பயிற்சி முகாம்**

ஊட்டி : நீலகிரி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு இரண்டாம் கட்ட பயிற்சி முகாம் வரும் 18ம் தேதி மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட பயிற்சி அரங்கில் நடக்கிறது.மாவட்ட கலெக்டர் ஆனந்தபாடீல் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:நீலகிரி மாவட்டத்தில் விவசாயிகளுக்கான நுகர்வோர் விழிப்புணர்வு பயிற்சி முகாம் முதற்கட்டமாக 50 நபர்களுக்கு கடந்த 11ம் தேதியன்று மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வழங்கப்பட்டது. இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்ட பயிற்சி வரும் 18 மற்றும் 25ம் தேதிகளில், 50 பேர் வீதம் தோட்டக்கலைத்துறை இணை இயக்குனர் மற்றும் தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு சங்க உறுப்பினர் மூலம் வழங்கப்படுகிறது. மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட பயிற்சி

அரங்கில் நடக்கும் பயிற்சி முகாமில் விவசாயிகள் கலந்து கொண்டு பயனடையலாம்.இவ்வாறு, ஆனந்த்பாடீல் கூறியுள்ளார்.

### நெல் கொள்முதல் நிலைய பணியாளருக்கு ரூ.5 ஆயிரம் சம்பளம் வழங்க வலியுறுத்தல்

தஞ்சாவூர் : நெல் கொள்முதல் பணியாளர்களுக்கு ரூபாய் 5 ஆயிரம் சம்பளம் வழங்க வேண்டும் என்று ஏ.ஐ.டி.யூ.சி., நுகர்பொருள் வாணிபக் கழக தொழிலாளர் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக தொழிலாளர் சங்கம் மற்றும் சுமை தூக்கும் தொழிலாளர் சங்கங்களின் நிர்வாகக்குழு கூட்டம் தஞ்சையில் நடந்தது.மாநில துணைத் தலைவர் சிவானந்தம் தலைமை வகித்தார். ஏ.ஐ.டி.யூ.சி., மாநில செயலாளர் மணி வரவேற்றார். சங்க பொதுச் செயலாளர் சந்திரகுமார், துணைத் தலைவர் சந்தானம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.அரசு நெல் கொள்முதலில் கடந்த ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட 20 சதவீத ஈரப்பதம் வரை கொள்முதல் செய்ய அரசு அனுமதி அளிக்க வேண்டும்.தஞ்சை, புதுகை, கடலூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு இதுவரை கிடைக்காத பொங்கல் பண்டிகை பரிசு தொகை ரூபாய் 350 உடனே வழங்க வேண்டும்.கொள்முதல் நிலையங்களில் பல நாட்கள் தேக்கம் ஏற்பட்டு அதன் பின்னர் இயக்கம் ஏற்படுவதால் எடை இழப்பு ஏற்படுகிறது. இதை கொள்முதல் பணியாளர்கள் ஈடுகட்ட வேண்டும் என்ற நடைமுறையை நீக்க வேண்டும்.கொள்முதல் பணியாளர்களுக்கு ரூபாய் 5 ஆயிரம் சம்பளம் வழங்க வேண்டும், சுமைதூக்கும் தொழிலாளர்களுக்கு எடை கூலி ரூபாய் 5ம், ஏற்றுக்கூலி ரூபாய்2ம் உடனே வழங்க வேண்டும்.மேற்கண்ட கோரிக்கையை வலியுறுத்தி தஞ்சை, நாகை, திருவாரூர், கடலூரில் நுகர்பொருள் வாணிபக்கழக அலுவலகம் முன்பு வரும் 23ம்தேதி ஆர்ப்பாட்டம் நடத்துவது ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.இணை பொதுச் செயலாளர் குணசேகரன், பொருளாளர் கோவிந்தராஜன், சுமைதூக்கும் தொழிலாளர் சங்க மாநில பொதுச் செயலாளர் பெருமாள், தலைவர் சாமிக்கண்ணு, செயலாளர் முருகேசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### நெற்பயிர்கள் கதிர் பருவத்தில் இருக்கும் போதுசெய்யவேண்டிய பணிகள் என்ன?

செய்துங்கநல்லூர் :நெல் பயிர் கதிர் பருவத்தில் உள்ள போது கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகளை வேளாண் அதிகாரி தெரிவித்துள்ளனர்.பயிரில் கதிர் நாவாய்ப்பூச்சி நடமாட்டம் உள்ள தா? என்று காலை நேரத்தில் கவனியுங்கள். குறிப்பாக உங்கள் பயிர் மற்ற விவசாயிகளின் பயிருக்கு பிந்தி நட்ட பயிர் எனில், நன்கு கண்காணிக்க வேண்டும். கதிர் நாவாய்ப்பூச்சிகள் நீண்ட கால்கள் மற்றும் உணர் கொம்புகளுடன் காணப்படும். உடல் பழுப்பு நிறத்தில் சுமார் இரண்டு செ.மீ., நீளமானது. பூச்சியினைக் கையால் தொட்டால் துர்நாற்றம் வீசும். தீவிர தாக்குதல் உள்ள வயலிலும் துர்நாற்றம் வீசும். இதனைக் கட்டுப்படுத்த லிண்டேன் 1.3 சத தூள் அல்லது மாலத்தியான் ஐந்து சத தூளினை ஏக்கருக்கு பத்து கிலோ வீதம் அதிகாலை நேரத்தில் பனிப்பதத்தில் தூவ வேண்டும். தாக்குதல் அதிகமாக இருந்தால் மானோகுரோட்டோபாஸ் அல்லது மாலத்தியான் திரவ மருந்தினை ஏக்கருக்கு இருநூறு மில்லி வீதம் மாலை நேரத்தில் தெளிக்க வேண்டும்.

தேவைப்பட்டால் ஒரு வாரம் கழித்து மீண்டும் தெளிக்க வேண்டும். மேலும் ஆங்காங்கே வெண்கதிர் தென்பட்டால் டீலக்ஸ் பொன்னி, செல்லப்பொன்னி மற்றும் பால் ஒட்டு பயிரிட்டுள்ளவர்கள் கதிரின் கழுத்துப்பாகத்தினையும் கவனியுங்கள். குலைநோய் தாக்கியிருந்தால் கதிரின் கழுத்துப்பாகம் பழுப்பு நிறமடைந்தும், கதிர் வெண்சாவியாகியும் காணப்படும். தற்போதுள்ள காலை குளிர் மற்றும் அதிக அளவு தழைச்சத்து உரங்கள் இடுதல் கதிர் குலை நோயை ஏற்படுத்தும். கதிர் குலை நோயை கட்டுப்படுத்த ஏக்கருக்கு டிரைசைக்ளோசோல் 75டபிள்யு பி 120 கிராம் வீதம் பயிர் முழுவதும் படும்படித் தெளிக்க வேண்டும். மருந்துக் கரைசல் பயிரில் நன்கு படிவதற்காக, சாண்டோவிட், இண்ட்ரான்,

ஸ்டிக்கால், பைப்டோவிட், அக்ரோவிட் போன்ற திரவ சோப்புகளில் ஏதேனும் ஒன்றினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு கால் மில்லி வீதம் சேர்த்துக் கலக்கி கொள்ள வேண்டும்.

இவ்வாறு திருவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் ராமலிங்கம் தெரிவித்துள்ளார்.உடன்குடி டவுன் பஞ்.,சில் ரூ.50.82 லட்சத்தில் புதிய ரோடுகள்உடன்குடி, பிப்.17- உடன்குடி டவுன் பகுதியில் ரூ.50.82 லட்சம் செலவில் புதிய ரோடுகள் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என உடன்குடி டவுன் பஞ்.,தலைவர் அறிவித்துள்ளார்.உடன்குடி டவுன் பஞ்.,பகுதியில் நபார்டு பாங்க் மாநில நிதி உதவியுடன் ரூ.50.82 லட்சத்தில் தார்சாலைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி காட்டுவாத்தட்டு முதல் மெஞ்ஞானபுரம் ரோடு வரை உள்ள தெருக்களிலும், கிறிஸ்தியாநகரம் வடக்கு தெரு, தெற்கு தெரு, சுல்தான்புரம் வடக்கு தெரு மற்றும் வைத்திலிங்கபுரம் தெருக்களில் ரூ.19.68 லட்சம் மதிப்பீட்டிலும், புதுமனை மேலத்தெரு, கோட்டவிளை காலனி மற்றும் வில்லிகுடியிருப்பு ஆகிய பகுதிகளில் ரூ.17.68 லட்சம் மதிப்பீட்டிலும், கொத்துவாபள்ளி தெரு கிழக்கு பகுதியிலிருந்து தோட்டக்காடு செல்லும் ரோடு வரை ரூ.13.46 லட்சம் மதிப்பீட்டிலும் புதிய தார்சாலைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது டெண்டர் விடப்பட்டு பணி விரைவில் துவங்கியுள்ளது என உடன்குடி டவுன் பஞ்.,தலைவர் சாகுல்ஹமீது அறிவித்துள்ளார்.

### விதை தொழில் நுட்ப பயிற்சி முகாம்

துறையூர்:வேளாண் துறை மூலம் துறையூர் அருகே கீரம்பூர், வேலாயுதம்பாளையம், வீரமச்சான்பட்டி கிராமங்களில் விதைநெல் தொழில் நுட்ப பயிற்சி முகாம்கள் நடந்தது.கீரம்பூரில் நடந்த விதை கிராம திட்ட பயிற்சிக்கு ஊராட்சி தலைவர் தங்கமணி தலைமை வகித்தார். துறையூர் வேளாண் உதவி இயக்குனர் ராஜசேகரன் பயிற்சியை துவக்கி வைத்தார். ஏற்பாடுகளை துறையூர் வேளாண் அலுவலர்கள் செல்வம், பிரபாகரன் ஆகியோர் செய்திருந்தனர்.

### மரபணு மாற்ற விதைகளுக்கு தடை விதிக்கதமிழ்நாடு அறிவியல் இயக்கம் வலியுறுத்தல்

திருநெல்வேலி:நெல்லை டவுன் மந்திரமூர்த்தி மேல்நிலைப் பள்ளியில் பி.டி கத்தரிக்காய் விழிப்புணர்வு கருத்தரங்கு நடந்தது.நெல்லை பல்கலைக் கழக மேலாண்மைத் துறை மாதவன் தலைமை வகித்தார். தீபம் இயக்குனர் பால்ராஜ் வரவேற்றார். மகேஸ்வரி விழிப்புணர்வு பாடல் பாடினார்.பி.டி கத்தரிக்காய் விழிப்புணர்வு கண்காட்சியை கானார்பட்டி பஞ்., தலைவர் ஸ்டீபன் ஞானராஜ் துவக்கி வைத்தார். கருத்தரங்கை துவக்கி வைத்து நவஜீவன் டிரஸ்ட் இயக்குனர் நளன், தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட செயலாளர் தலைமை ஆசிரியர் கணபதி உட்பட பலர் பேசினர்.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளை தடை செய்ய மத்திய, மாநில அரசுகளை கோரவும், இதுசார்பாக விழிப்புணர்வு இயக்கங்களை மாவட்டம் முழுவதும் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது. பி.டி கத்தரிக்காயை நிரந்தரமாக தடை செய்ய வேண்டும்.இயற்கை விஞ்ஞான முறைகளை நடைமுறைப்படுத்த அதிக முக்கியத்துவமும், நிதி ஒதுக்குவதற்கும் முன்னுரிமை வழங்க வேண்டும். நன்செய் நிலங்களை அழித்து கட்டடங்கள் கட்டப்படுவதை உடனடியாக தடை செய்ய வேண்டும். சித்த மருத்துவத்தில் ஆங்கில வழியை தவிர்க்க வேண்டும் என்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நவஜீவன் டிரஸ்ட் திட்ட அலுவலர் தர்மக்கனி, வான்முகில் ஒருங்கிணைப்பாளர் மாரியப்பன், கவிஞர் புதுரான், விவசாயிகள், பெண்கள், தொழிற் சங்க பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்பினர் உட்பட பலர் கலந்து கொண்டனர். பள்ளி மாணவ, மாணவிகளின் பல்வேறு கலைநிகழ்ச்சிகளும் நடந்தது.மாவட்ட அறிவியல் இயக்க நெல்லை வட்ட

செயலாளர் உமையொரு பாகம் நன்றி கூறினார். ஏற்பாடுகளை தீபம் ஒருங்கிணைப்பாளர் ஸ்டெல்லா, மகேஸ்வரி, வெண்மணி கலைக் குழு தலைவர் தம்பித்துரை செய்திருந்தனர்.

### உளுந்து விதைப்பண்ணையில் மாவட்ட உதவி இயக்குனர் ஆய்வு

வந்தவாசி:வந்தவாசி அருகே, உளுந்து விதைப்பண்ணையில் மாவட்ட விதைச்சான்று வேளாண் உதவி இயக்குனர் ஆய்வு செய்தார்.வந்தவாசி தாலுகா, தாமரைப்பாக்கம் கிராமத்தில் விவசாயிகள் பயிர் செய் துள்ள "வம்பன்-3' ரக உளு ந்து பயறுக்கான ஆதார விதைகளை மாவட்ட விதைச் சான்று வேளாண்மை உதவி இயக்குனர் சுப்பிரமணியன், விதைச்சான்று அலுவலர் ராமலிங்கம் ஆகியோர் ஆய்வு செய்தனர்.

பின்னர், இது குறித்து மாவட்ட விதைச்சான்று உதவி இயக்குனர் சுப்பிரமணியன் கூறியதாவது: திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் ஊடு பயிராக பல பயிர்களை பயிர் செய்யலாம். அதிக செலவில்லாமல் குறுகியகால பயிராக உளுந்து போன்ற பயறு வகைகளை பயிரிட்டால் அதிக லாபம் கிடைக்கும்.

இந்த விதைகளை கலப்படம் இல்லாமல் விவசாயிகளுக்கு வழங்குவதற்காகத்தான் நிலத்திலேயே பயிர்களை ஆய்வு செய்து, கலப்பு விதைகளை நீக்கி, பக்குவப்படுத்தி அந்தந்த வேளாண்மை துறை அலுவலகங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்குகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

### உரக்கிடங்கில் மக்கிய நிலையில் உரக்கழிவுகள் விவசாயிகள் இலவசமாக எடுத்துச்செல்ல அழைப்பு

திருத்துறைப்பூண்டி: ""திருத்துறைப்பூண்டி நகராட்சி உரக்கிடங்கில் உள்ள மக்கிய நிலையில் உள்ள உரக்கழிவுகளை விவசாயிகள், தொண்டு நிறுவனங்கள் இலவசமாக எடுத்துச் செல்லலாம்,'' என நகராட்சி கமிஷனர் திருமலைவாசன் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது: மக்களிடையே இன்றைய சூழலில் அடைக்கப்பட்ட, பதப்படுத்தப்பட்ட, துரித உணவு வகைகள் அதிக அளவிலும், பிளாஸ்டிக் உபயோகம், தனிக்குடும்பம் அதிகரிப்பு, தயாரிப்பாளர்கள் பெரும் லாப நோக்குடன் மட்டும் செயல்படுதல் போன்றவையால் குப்பை உற்பத்தி அதிகமாகிறது. மக்கும் குப்பை உபயோகம் குறைந்து, மக்காத ஆபத்து விளைவிக்கும் பொருட்களின் உபயோகம் அதிகரித்து சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் குப்பைகள் தேக்கத்தால் இயற்கை வளம் குறைகிறது. அதனால், பலநோய்கள் ஏற்படுகிறது. எனவே, பொதுமக்கள் பிளாஸ்டிக் உபயோகத்தை தவிர்க்க வேண்டும். திடக்கழிவு மேலாண்மையில் பொதுமக்கள் விழிப்புடன் செயல்பட்டால் சுற்றுச்சூழல் பாதிப்பை தவிர்க்கலாம்.

பணியாளர்கள் மூலம் கொசு மருந்து தெளித்தல், புகை மருந்து அடித்தல், நச்சுத்தடை தொட்டியில் காற்று போக்கியில் கொசு வலை கட்டுதல் போன்ற பணிகள் மூலம் கொசு கட்டுப்படுத்தும் பணி நகராட்சியால் மேற்கொள்ளப்படுகிறது. பொதுமக்கள் குடியிருப்பை சுற்றி உள்ள பகுதியில் தண்ணீர் தேங்காதவாறும்,வடிகால்களில் குப்பைகளை கொட்டாமல், நச்சுத்தலைத்தொட்டியில் (செப்டிக் டேங்) கொசுக்கள் உட்புகாதவாறு தடுத்து கொசு உற்பத்தியாகாமல் நகராட்சிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தற்போது நகராட்சியில் ஆட்டு இறைச்சி விற்பனை செய்பவர்கள், நகராட்சி ஆடு வதை செய்யும் இடத்தில் அறுத்து, முத்திரையிட்டு விற்பனை செய்யப்படுகிறது. பொதுமக்கள் நகராட்சியால் முத்திரையிடப்பட்ட இறைச்சியை மட்டும் வாங்கிடவும், பொது இடங்களில் ஆடு வதை செய்வதையும், இறந்த ஆடுகளை அறுப்பதோ தெரியவருமானால் நகராட்சிக்கு மக்கள் தெரிவிக்கலாம். வேதாரண்யம் ரோட்டில் இயங்கி வரும் நகராட்சி உரக்கிடங்கில் மக்கிய நிலையில் உள்ள உரக்கழிவுகளை விவசாயிகள் பயன்படுத்த உகந்த நிலையில் உள்ளது. விவசாயிகள், தன்னார்வதொண்டு

நிறுவனங்கள், தேவைப்படுவோர்கள் நகராட்சி அலுவலகத்தை அணுகி, இந்த உரத்தை இலவசமாக எடுத்துச் செல்லலாம். இவ்வாறு நகராட்சி கமிஷனர் கேட்டுக்கொண்டார்.

### மாவு பூச்சியை அழிக்க ரூ.67 லட்சத்தில் திட்டம்

அவிநாசி : அன்னூர், அவிநாசி வட்டாரத்தில் 3,000 ஏக்கரில் மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த, ரூ.67 லட்சத்தில் மருந்து தெளிப்பு பணி துவங்கியுள்ளது.அன்னூர் வட்டாரத்தில் பல ஆயிரம் ஏக்கர் பயிர்களில் கள்ளிப்பூச்சியால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இலைகள் சுருண்டு, விளைச்சல் பாதியாக குறைந்துள்ளது. வேளாண் துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் பட்டுவளர்ப்பு துறை இணைந்து, ஒருங்கிணைந்த மருந்து தெளிப்பு பணியை அல்லப்பாளையத்தில் துவக்கியுள்ளன.கோவை வேளாண் இணை இயக்குனர் கந்தசாமி பேசியதாவது:
இத்திட்டத்தில், கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம், நாமக்கல் ஆகிய மாவட்டங்களுக்கு அரசு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. கோவை மாவட்டத்தில் அன்னூர், திருப்பூர் மாவட்டத்தில் அவிநாசி ஆகியவற்றுக்கு 67 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.அன்னூர் வட்டாரத்தில் 7,600 ஏக்கர் பரப்பில் பயிர் பாதிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக, அசாடிராக்டின் தண்ணீரில் கலந்து ரோட்டோரம், குளம், குட்டை மற்றும் தோட்டங்களில் உள்ள செடிகள், பயிர்களுக்கு தெளிக்கப்படுகிறது. 15 நாட்களுக்கு பின், புரொபனோபாஸ் மருந்து தெளிக்கப்பட உள்ளது. இதனால், மாவுப்பூச்சி நூறு சதவீதம் கட்டுப்படும் என்ற நம்பிக்கை உள்ளது.விவசாயிகள் சொட்டு நீர் பாசனம் அமைப்பதால், ஐம்பது சதவீத நீரை சேமிக்கலாம். 65 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. பயறு பெருக்கத்திட்டத்தில் டிஏபி உரம் மானிய விலையில் வழங்கப்படுகிறது. எண்ணெய் வித்து பயிரிடும் விவசாயி
களுக்கு ஜிப்சம் 50 சதவீத மானியத்தில் வழங்குகிறோம். விசை தெளிப்பானுக்கு 2,000 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.இவ்வாறு, கந்தசாமி பேசினார்.துவக்க நிகழ்ச்சியில், வேளாண் உதவி இயக்குனர் விஜயகுமார், தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் பிரேம்குமார், ஊராட்சி ஒன்றிய தலைவர் ராதா, ஊராட்சி தலைவர் கண்ணன் உள்பட பலர் பங்கேற்றனர். விசை தெளிப்பான் மூலம் 11 பேர் மருந்து தெளிக்கும் பணியில் ஈடுபட்டனர். ஒரே நாளில் நூறு ஏக்கருக்கும் அதிகமான பரப்பில் தெளிக்கப்பட்டது.ஓரைக்கால்பாளையத்தில் தானியங்களை உலர வைக்க, உலர் களம் அமைத்துத்தர வேண்டும் என்று பண்ணை மகளிர் குழுவினர் மனு கொடுத்தனர். விவசாயிகளுக்கு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். "மாவுப்பூச்சி தாக்குதலால் பட்டுப்புழு வளர்ப்பு நலிந்து வருகிறது' என அதிகாரிகளிடம் விவசாயிகள் கூறினர்.

### பட்டுப்புழு வளர்த்தால் லாபம் கிடைக்கும்

உடுமலை : "மண் ஆய்வு செய்து மல்பெரி ரகங்களை பயிரிடுவதால், பட்டுப்புழு வளர்ப்பில் நல்ல லாபம் பெறலாம்', என செயல் விளக்க கருத்தரங்கில் விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டது.உடுமலை அருகேயுள்ள பொட்டிநாயக்கனூர் கிராமத்தில் "ஆத்மா' திட்டத்தின் கீழ் பட்டு வளர்ப்பு செயல்விளக்கம் மற்றும் கருத்தரங்கம் நடந்தது.பட்டு விவசாயி வேலாயுதசாமி முன்னிலை வகித்தார். பட்டு வளர்ச்சி துறை உதவி ஆய்வாளர் குலாம்முகமது வரவேற்றார். பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குநர் பன்னீர் செல்வம் பேசியதாவது: உடுமலை பகுதி விவசாயிகள் வெண்பட்டு வளர்ப்பில் முன் னோடியாக உள்ளனர். மல்பெரி செடிகளை தாக்கும் மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்த விவசாயிகள் ஒருங்கிணைந்து நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும். பட்டுக்கூடுகளை மாநில அரசின் கொள்முதல் மையங்களில் விற்பனை செய்ய விவசாயிகள் முன்வரவேண்டும் என்றார்.மத்திய பட்டு வாரிய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க நிலைய விஞ்ஞானி செல்வராஜ், பட்டுப்புழு வளர்ப்பில் தேவையான உற்பத்தி பெற மல்பெரி செடி வளர்ப்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

செடிகளை பயிரிடும் முன் மண் பரிசோதனையை கட்டாயம் செய்ய வேண்டும்.பரிசோதனை முடிவுகள் அடிப்படையில் பரிந்துரைக்கப்படும் உரங்களை பயன்படுத்துவதால் சாகுபடி செலவு குறைக்கப் படுவதுடன், தேவையான உற் பத்தியும் பெற முடியும். தண்ணீர் தட்டுப்பாட்டை தவிர்க்க சொட்டு நீர் பாசனத்தை பயன்படுத்துவதால், விரயம் குறைந்து, வயலில் தேவையற்ற களைகள் முளைக்காது.கோடையில் முறையாக சாகுபடி தொழில்நுட்பங்களை பயன் படுத்தினால் கூடுதலாக மல்பெரி இலைகளை அறுவடை செய்யலாம். உடுமலை பகுதி விவசாயிகள் தொழில்நுட்பங்களை முறையாக பின்பற்றுவதால் ஆண்டு முழுவதும் வெண்பட்டுக்கூடுகளை உற்பத்தி செய்ய முடிகிறது. பரிசோதனை முறையில் முதற்கட்டமாக ஆண்டு முழுவதும் மூன்று விவசாயிகள் வெண் பட்டுக்கூடுகளை வளர்த்தனர்.கடந்த சில ஆண்டுகளில் உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளின் எண்ணிக்கை பல ஆயிரமாக உயர்ந்துள்ளது. மண் பரிசோதனை, மல்பெரி செடி, புழு வளர்ப்பு மனைகளை முறையாக பராமரித்தால் அனைத்து சீசன்களிலும் நல்ல உற்பத்தி பெற முடியும் இவ்வாறு பேசினார்.பப்பாளி மாவுப்பூச்சி தடுப்பு முறைகள் குறித்து உதவி ஆய்வாளர் சண்முகசுந்தரம் பேசினார்.

---

**நறுமணமிக்க தர்மபுரி கொத்தமல்லி**

பிப்ரவரி 16,2010,09:39



தர்மபுரி கொத்தமல்லி சாகுபடிக்கு பிரசித்தி பெற்றது. மானாவாரி கரிசல் நிலங்களில் இரண்டாவது பயிராக கொத்தமல்லி சாகுபடி செய்யப்படுகிறது. ஐப்பசியில் விதைத்த பயிர் மார்கழி கடைசியில் அறுவடைக்கு வருகின்றது. தர்மபுரியிலிருந்து பென்னாகரம் செல்லும் ரோட்டின் இரு புறங்களிலும் கொத்தமல்லி சாகுபடி உள்ளது. இதன் நறுமணம் பேருந்து களில் செல்லும் மக்களை கவர்ந்திழுக்கிறது. கொத்தமல்லி இதன் கீரைக்காகவும், தானியத்திற்காகவும் சாகுபடி செய்யப்படுகிறது. திருச்சி மாவட்டத்தில் கரிசல் மண் நிலங்களில் மானாவாரி பயிராகவும், கலப்புப் பயிராகவும், பருத்தி, உளுந்து ஆகியவற்றோடு கொத்தமல்லியும் சாகுபடி செய்யப்படுகிறது. இருப்பினும் இப்பகுதி கொத்தமல்லி தர்மபுரி பகுதியில் விளையும் கொத்தமல்லியைவிட தரத்தில் சற்று குறைவாகவே உள்ளது. கொத்தமல்லியில் உயர் விளைச்சல் ரகங்களான கோ.1, கோ.2 உள்ளன. இவைகளின் வயது 90 நாட்கள். ஆனால் தர்மபுரி பகுதியில் சாகுபடி செய்வது உள்ளூர் ரகமேயாகும். தர்மபுரி பகுதியில் மானாவாரி சாகுபடியில் நல்ல மகசூல் எடுப்பதற்கு விவசாயிகள் அனுசரிக்கும் சாகுபடி முறைகள் முக்கிய காரணமாக இருந்து வருகின்றது. இந்த வருடம் கொத்தமல்லி விவசாயிகள் தங்கள் பயிரில் நல்ல லாபம் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றனர்.

கொத்தமல்லி சாகுபடியில் புழுதி உழவு செய்வதில் விவசாயிகள் நல்ல அக்கறை காட்டி வருகின்றனர். கடைசி உழவின் போது நன்கு மக்கிய தொழு உரம் ஏக்கருக்கு 5 வண்டிகள் வரை இடப்படுகின்றன. கடன் பட்டாவது தொழு உரத்தினை இடுகின்றனர். நன்கு தயார் செய்யப்பட்ட நிலத்தில் 18 கிலோ விதை விதைக்கப்படுகிறது. விதைகள் 10 நாட்களில் பழுதில்லாமல் முளைத்துவிடுகின்றன. சாகுபடி சமயம் பனி பெய்வது பயிர் வளர்ச்சிக்கு உதவுகின்றது. தற்போது நல்ல பனி பெய்துவருகின்றது. தொழு உரம் இடப்பட்டுள்ளதால் களைச்செடிகள் வளரும். விவசாயிகள் இந்த களைச் செடிகளின் வேர்கள் பூமியின் மேல் மட்டத்தில் இருக்கும்போதே பக்குவமாக அவற்றை அகற்றிவிடுகின்றனர். இவர்கள் பூமியை ஆழமாக கொத்தாததால் பூமியிலுள்ள ஈரம் காய்ந்துவிடுவதில்லை. சாகுபடி சமயம் கீரைக்காக அறுவடை செய்வதுண்டு. விதைத்த 30ம் நாள் செடிகளை கலைத்து இளம் கீரையை அகற்றுவார்கள். பிறகு மார்க்கெட்டில் கட்டாக

விற்று நல்ல வருவாய் பெறுகின்றனர். செடி வளர்ந்து பூக்கள் பிடித்து பின் காய்கள் பிடிக்கும். காய்கள் பச்சை நிறத்திலிருந்து பொன்னிறமாக மாறும். இதுவே அறுவடை தருணமாகும். இந்த தருணத்தில் விவசாயிகள் செடிகளை அறுவடை செய்துவிடுகின்றனர். ஏமாந்தவர்கள் தங்கள் செடிகளிலிருந்து கொட்டிவிடும் தானியங்களினால் குறைந்த மகசூலினை பெறுகின்றனர். கொத்தமல்லி பயிர் மார்கழி கடைசி அல்லது தை மாதம் முதல் வாரத்தில் அறுவடைக்கு வரும். பழுத்த செடிகளை பிடுங்கி களத்துமேட்டில் பரவலாகப் போட்டு காயவைப்பார்கள். பின் மாடுகள் பிணை பூட்டி மிதிக்கவைத்து அடித்து மணிகளை எடுத்து சுத்தம் செய்வார்கள். விவசாயி களால் தயாரிக்கப்பட்ட சரக்கு பொன் நிறத்தைக் கொண்டிருக்கும். தர்மபுரி விவசாயிகள் கொத்தமல்லி சாகுபடியை நெடுங்காலமாக இயற்கை முறையிலேயே செய்கின்றனர். நிலத்திற்கு ரசாயன உரங்களையே இடுவதில்லை. தொழு உரம் மட்டுமே இடுகின்றனர். மேலும் விவசாயிகள் பூச்சி பாதிப்பைத் தவிர்க்க எந்த விஷ மருந்துகளையும் உபயோகிப்பதே கிடையாது. இதன் காரணத்தினாலேயே தர்மபுரி கொத்தமல்லிக்கு எப்போதும் நல்ல டிமாண்டே இருந்து வருகின்றது.

விவசாயிகள் சாகுபடிக்கு கவனமாக செலவு செய்கின்றனர். ஆரம்ப உழவிற்கு செலவு (3 சால் உழவு), விதைக்க ஏக்கருக்கு செலவு (8 ஏர்), ஏக்கருக்கு இயற்கை எரு 5 மாட்டு வண்டிக்கு செலவு, எரு கலைக்க செலவு, விதை கொத்தமல்லி (5 வள்ளம், 18 கிலோ) விலை, களைச்செலவு, செடிகளை வேருடன் பிடுங்கி, அறுவடை செய்ய செலவு, அடித்து பிணை கட்டவும் மற்றும் சுத்தம் செய்யவும் செலவு போன்ற பணிகளுக்கு சாகுபடி செலவு அதிகமாகும். ஆனால் சாகுபடி பணிகளில் பெரும் பகுதியை விவசாயி தனது குடும்ப நபர்களை வைத்தே செய்துவிடுவதால் கொத்தமல்லி சாகுபடிக்கு ஏக்கருக்கு 3,150 ரூபாய்தான் செலவாகின்றது. கொத்தமல்லி சாகுபடியில் ஏக்கரில் 7மூடை மகசூல் கிட்டுகின்றது. (மூடை 40 கிலோ - இதன் மதிப்பு 7,000 ரூபாய்). சாகுபடி செலவு 3,150 ரூபாய் போக நிகர லாபமாக 3,850 அல்லது 4000 ரூபாய் கிடைக்கிறது. இந்த லாபமானது மானாவாரி சாகுபடியில் முதல் பயிரில் (சோளம் அல்லது கேழ்வரகு) எடுக்கும் லாபத்தைவிட கூடுதலாகும்.

## நவீன தொழில்நுட்பம்

பிப்ரவரி 16,2010,09:43

**காய்கறி நாற்றுகள் உற்பத்திக்கு குழித்தட்டு நாற்றங்கால்**

நாற்றுகள் நல்ல வாளிப்பாகவும் முழுமையான வேர்களுடனும் கிடைக்க புரோடிரே என்று சொல்லப் படும் குழித்தட்டுகள் / நாற்று அட்டைகள் உதவுகின்றன. இம்முறையில் நன்கு மக்கிய தென்னை நார்க்கழிவுகள் வளர் ஊடகமாக பயன்படுத்தி பூச்சிகள் புகாத நிழல்வலைகள் கூடாரங்களில் சீரான இடைவெளிகளில் நாற்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

பாலிதீன் குழி தட்டுகளில் பொதுவாக 98 குழிகள் காணப்படும். இக்குழித்தட்டுகள் 0.2, 0.4, 0.6, 0.8 மற்றும் 1 மி.மீ. தடிமன்களில் 1.0" மற்றும் 1.5" குழி அளவுகளில் தட்டுகள் கிடைக்கின்றன. பொதுவாக காய்கறி பயிர்களுக்கு 0.8 மி.மீ. தடிமன் கொண்ட 98 குழிகள் உள்ள தட்டுகள் பயன்படுத்தப் படுகிறது. அதிகப்படியான நீர் வழிந்து செல்ல ஏதுவாக இக் குழித்தட்டுகளில் கீழே துவாரங்கள் காணப்படும். இக்குழிகளில் நன்கு மக்கிய தென்னை நார்க்கழிவு அதிகப் படியான நீரை வடித்து விடுவதுடன் தொடர்ந்து நாற்றுக்கு தேவையான ஈரப்பதத்தையும் தருகிறது.

விதைநேர்த்தி செய்த விதைகளை ஒரு குழிக்கு ஒரு விதை வீதம் 1 செ.மீ. ஆழத்தில் இக் குழிகளில் ஊன்ற வேண்டும். மறுபடியும் தென்னை நார்க்கழிவு மூலம் விதைகளை மூடி குழித்தட்டுக்களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி வெளிச்சம் உட்புகாதவாறு பாலிதீன் தாள் கொண்டு முளை வெளிவர ஆரம்பிக்குபோது இத்தட்டுக்களை எடுத்து நிழல்வலை குடிலில் அடுக்கி வைக்க வேண்டும். தினமும் காலை மற்றும் மாலை ஆகிய இரு நேரமும் பூ வாளியால் நீர் தெளிக்க வேண்டும். இத்தகைய நாற்றங்காலில் 100 சதம் ஈரப்பதம் மற்றும் 20-30 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை காணப்படும். கோடைகாலத்தில் வெப்பநிலை 30 டிகிரி செ.க்கு மிகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

நன்கு பாதுகாக்கப்பட்ட நாற்றங்காலில் பொதுவாக பூச்சி மற்றும் நோய் தாக்குதல் இருக்காது. சில வேளைகளில்

அரிதாக வேரழுகல் நோய் காணப்பட்டால் காப்பர் ஆக்சி குளோரைடு ஒரு கிராம்/ லிட்டர் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். தக்காளி, மிளகாய் போன்ற செடிகளில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதல் இருப்பின் இமிடா குளோர்பிட் 0.5 மி.லி / லிட்டர் அல்லது டிரையசோபால் 1.5 மி.லி/லிட்டர் நீர் என்ற அளவில் கலந்து தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம். இம் முறையில் காய்கறி நாற்றுகள் விதைத்த 25-40 நாட்களில் நடவுக்கு தயாராகிவிடும். குழித் தட்டுகளில் உற்பத்தி செய்த நாற்றுகளை வயலில் நடவு செய்யும்பொழுது நாற்றுகள் துரிதமாக உயிர்பெற்று வளரும்.

குழித்தட்டு முறையில் நாற்றுகள் நல்ல ஆரோக்கியமாகவும், முழுமையான வேர்களுடனும் கிடைக்கின்றன. சீரான வளர்ச்சி உடைய நாற்றுகள் உருவாகின்றன. பருவமற்ற காலங் களிலும் நாற்றுகள் உற்பத்தி செய்ய முடியும். விதையளவு 30-40 சதம் குறைவாக தேவைப்படுகிறது. நடவு வயலுக்கு எடுத்து செல்வது எளிதாகிறது. நடவு வயலில் போக்கு நாற்று நடவேண்டிய அவசியமில்லை. நடவு வயலில் தயார் செய்ய கால தாமதமாகும் நிலையில் குழித்தட்டு நாற்றங்கால் சரியான மாற்றமாகும். மற்றும் பாதுகாப்பான சூழலில் நாற்றுகள் வளர்க்கப்படுவதால் பூச்சி மற்றும் நோய்களின் தாக்குதலை கண்காணிக்க ஏதுவாகிறது.

### இயற்கை முறையில் கத்தரிக்காய் சாகுபடி



செய்யும் அனுபவ விவசாயி திருப்பூர் மாவட்டம் சென்னாக்கல் பாளையம் கிராமத்தைச் சேர்ந்த ப.ரங்கசாமி. கத்தரி நட்ட 70வது நாளில் ஒவ்வொரு செடிக்கும் 100 கிராம் மண் புழு உரத்துடன் 25 கிராம் வேப்பம் புண்ணாக்கை கலந்து வைத்து, மண் அணைக்கிறார். இதனால் வேர்ப் புழு தாக்குதல் இல்லை. காய்ப்புழு வந்தால் வேப்பங்கொட்டை கரைசலைத் தெளிக்க வேண்டும்.

எந்த பயிராக இருந்தாலும் பூ எடுக்கிற பருவத்தில் ஒரு டேங்குக்கு (10 லிட்டர் தண்ணீர்) அரை லிட்டர் அமுதக்கரைசல் வீதம் கலந்து அடிக்கிறார். காய் பிடிக்கும் மாதம் ஒரு தடவை இவ்வாறு அடிக்கிறார். காய்ப்பருவத்தில் டேங்குக்கு 300 மில்லி பஞ்சகவ்யாவைக் கலந்து அடித்தால் இலைசுருட்டுப்புழு வருவதில்லை. லயோலா கல்லூரி மாணவர்கள் கண்டுபிடித்து வந்திருக்கும் பொன்னீம் பூச்சிவிரட்டியை தயாரித்து தெளித்த உடனே எல்லாப்பூச்சிகளும் இருந்த இடம் தெரியாமல் ஓடிப்போய்விட்டது என்கிறார் விவசாயி.பொன்னீம் தயாரிப்பு முறை: வேப்பெண்ணெய்-450 மில்லி, புங்கன் எண்ணெய்-450 மில்லி, காதி சோப்பு கரைசல்-100 மில்லி, இவை அனைத்தையும் ஒன்றாக கலந்தால் பொன்னீம் தயார். ஒரு லிட்டர் தண்ணீருக்கு 30 மில்லி வீதம் கலந்து பயிருக்கு தெளிக்கலாம். ஏக்கருக்கு 10 டேங்க் தேவைப்படும்.

**வேப்பங்கொட்டை கரைசல் தயாரிப்பு முறை**: வேப்பங்கொட்டை-500 கிராம், மாட்டுச்சிறுநீர்-2 லிட்டர், வேப்பங்கொட்டை, பூண்டு இரண்டையும் இடித்து சிறுநீரில் 3 நாட்கள் ஊறவைத்து, ஒரு டேங்குக்கு 300 மில்லி வீதம் கலந்து பயிருக்கு தெளிக்கலாம். ஏக்கருக்கு 10 டேங்க் தேவைப்படும்.

(தகவல்: பசுமைவிகடன், பிப்ரவரி 10, 2010)

**அதிக விளைச்சலுக்கு பிராஸிேனோலைடு வளர்ச்சி ஊக்கி** - பயிர்களின் முக்கிய வளர்ச்சி பருவங்களான பூத்தல் மற்றும் காய்கள் பிடித்தல் சமயத்தில் வளர்ச்சி ஊக்கிகளை இலைவழி தெளிக்கலாம். பிராஸினோலைடு வளர்ச்சி ஊக்கி டபுள் என்ற பெயரில் கடைகளில் கிடைக்கும். இதை தெளிப்பான் மூலம் இலைவழி காலை மற்றும் மாலை வேளைகளில் தெளிக்கலாம். இந்த வளர்ச்சி ஊக்கி பயிரின் வளர்ச்சி மற்றும் ஊட்டச் சத்து உட்கொள்ளும் திறனை அதிகரிக்கிறது. பூக்களின் எண்ணிக்கை, காய் பிடித்தல், மகசூல் அதிகரிக்கிறது. வறட்சி, உவர்த்தன்மை, வெப்பம் தாங்கும் திறனை அதிகரிக்கிறது.

**நெல்**: பிராஸினோலைடு 150 மிலி/500 லிட்டர் தண்ணீர் / எக்டர் அளவில் மலர்கொத்து உருவாகும் மற்றும் பூக்கும் தருணத்தில் தெளிக்க வேண்டும்.
**பருத்தி**: 250 மிலி/500 லிட்டர் தண்ணீர்/எக்டர் பூக்கும் பருவம் தெளிக்க வேண்டும்.
**நிலக்கடலை**: 250மிலி/500 லிட்டர் தண்ணீர்/எக்டர் இலைவழியாக விதைத்த 40 நாட்கள் கழித்து தெளிக்க வேண்டும்.
**பயறு வகைகள்**: 150மிலி/500 லிட்டர் தண்ணீர்/எக்டர் விதைத்த 30 மற்றும் 45வது நாளில் தெளிக்க வேண்டும்.
இதனால் 15 சதம் கூடுதல் மகசூல் பெறலாம். (தகவல்: ரா.அமுதா, சி.ரா.அனந்தகுமார், வேளாண்மைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை-625 104. 0452-242 2956).

## *நடப்பு ஆண்டு ஜனவரி மாதத்தில் நாட்டின் சமையல் எண்ணெய் இறக்குமதி 3.4 சதவீதம் சரிவு*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*நடப்பு ஆண்டு ஜனவரி மாதத்தில், நாட்டின் சமையல் எண்ணெய் இறக்குமதி, சென்ற ஆண்டின் இதே மாதத்தைக் காட்டிலும் 3.38 சதவீதம் குறைந்துள்ளது.*
*கையிருப்பு*
*எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் வெளியிட்டுள்ள புள்ளி விவரப்படி, சென்ற 2008–09–ஆம் ஆண்டு எண்ணெய் பருவத்தின், ஜனவரி மாதத்தில் 8.56 லட்சம் டன் சமையல் எண்ணெய் இறக்குமதியாகி உள்ளது. இது, நடப்பு பருவத்தின் ஜனவரி மாதத்தில் 8.27 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. சேமிப்பு கிடங்குகளில் 15 லட்சம் டன் சமையல் எண்ணெய் கையிருப்பு உள்ளது. இது, 35 தினங்களுக்கு போதுமானதாகும். இதனால்தான் ஜனவரி மாதத்தில் சமையல் எண்ணெய் இறக்குமதி குறைந்துள்ளது.*
*அதேசமயம், சோப்பு மற்றும் இதர பொருள்கள் தயாரிக்க பயன்படும், சமையலுக்கு பயன்படாத எண்ணெய் இறக்குமதி 14,000 டன் அதிகரித்துள்ளது.*
*தாவர எண்ணெய்*
*சென்ற ஜனவரி மாதத்தில், ஒட்டுமொத்தத்தில், தாவர எண்ணெய் இறக்குமதி 2 சதவீதம் குறைந்து 8.88 லட்சம் டன்னிலிருந்து 8.72 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. இந்தியா, தாவர எண்ணெயை, இந்தோனேஷியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் இருந்து அதிக அளவில் இறக்குமதி செய்கிறது. தாவர எண்ணெய் இறக்குமதியில், இந்தியா, உலக அளவில் சீனாவிற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் உள்ளது.*
*சென்ற 2008–09–ஆம் ஆண்டு எண்ணெய் பருவத்தில் (நவம்பர் – அக்டோபர்), அக்டோபர் மாதம் நீங்கலாக, இதர*

அனைத்து மாதங்களிலும் சமையல் எண்ணெய் இறக்குமதி அதிகரித்து இருந்தது. இந்நிலையில், நடப்பு 2009–10–ஆம் ஆண்டு எண்ணெய் பருவத்தில், நவம்பர் மாதத்தில் சமையல் எண்ணெய் இறக்குமதி 5.19 லட்சம் டன்னிலிருந்து 7.12 லட்சம் டன்னாகவும், டிசம்பர் மாதத்தில் 7.19 லட்சம் டன்னிலிருந்து 7.60 லட்சம் டன்னாகவும் உயர்ந்துள்ளது. இதனையடுத்து, நடப்பு 2009–10–ஆம் ஆண்டு பருவத்தின் முதல் மூன்று மாதங்களில் (நவம்பர் – ஜனவரி), சமையல் எண்ணெய் இறக்குமதி, சென்ற பருவத்தின் இதே காலத்தைக் காட்டிலும் 10 சதவீதம் அதிகரித்து 23 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. கச்சா தாவர எண்ணெய் இறக்குமதி செய்யும் நிறுவனங்கள், தீர்வை எதுவும் செலுத்த தேவையில்லை. சுத்திகரிக்கப்பட்ட தாவர எண்ணெய் மீதான இறக்குமதி தீர்வையும் குறைவாக உள்ளது.

டாலர் மதிப்பு சரிவு

இந்நிலையில், சென்ற நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில், இந்திய ரூபாய்க்கு எதிராக அமெரிக்க டாலரின் மதிப்பு சரிவடைந்தது. இது, இறக்குமதியாளர்களுக்கு சாதகமான அம்சமாகும். இதுபோன்ற காரணங்களால், ஜனவரி மாதத்தில் இறக்குமதி குறைந்துள்ள போதிலும், ஒட்டுமொத்தத்தில் சமையல் எண்ணெய் இறக்குமதி அதிகரித்துள்ளது. மேலும், இதே காலத்தில் தாவர எண்ணெய் இறக்குமதியும் 10 சதவீதம் அதிகரித்து 21.89 லட்சம் டன்னிலிருந்து 24.14 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. பொதுவாக, ஒவ்வொரு ஆண்டிலும் நவம்பர் முதல் மார்ச் மாதம் வரையிலான காலத்தில், தாவர எண்ணெய் இறக்குமதி, முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது குறைவாக இருக்கும். இந்நிலையில், தற்போது எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி குறைந்துள்ளதால், இறக்குமதி உயர்ந்துள்ளது.

உற்பத்தி

நடப்பு எண்ணெய் பருவத்தில், உள்நாட்டில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி சென்ற பருவத்தைக் காட்டிலும் 5 சதவீதம் சரிவடைந்து 2.63 கோடி டன்னாக குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்ற 2008–09–ஆம் ஆண்டு பருவத்தில், இந்தியாவில் சமையல் எண்ணெய் பயன்பாடு சுமார் 1.40 கோடி டன்னாக இருந்தது. அதேசமயம், உள்நாட்டில் இதன் உற்பத்தி 75 லட்சம் டன்னாக மட்டுமே இருந்தது. எனவே, கச்சா தாவர எண்ணெயை இறக்குமதி தீர்வை எதுவுமின்றி இறக்குமதி செய்ய மத்திய அரசு அனுமதித்தது. மேலும், சுத்திகரிக்கப்பட்ட சமையல் எண்ணெய் மீதான இறக்குமதி தீர்வையை 40–50 சதவீதத்திலிருந்து 7.5 சதவீதமாக குறைத்தது. இதுபோன்ற காரணங்களால், சென்ற எண்ணெய் பருவத்தில் சமையல் எண்ணெய் இறக்குமதி 81 லட்சம் டன்னாக மிகவும் உயர்ந்து காணப்பட்டது.

பணவீக்க விகிதம்

நாட்டில், சர்க்கரை, பருப்பு வகைகள், உருளைக்கிழங்கு விலை உயர்ந்து வருகிறது. இதனையடுத்து, உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 18 சதவீதத்தை எட்டி உள்ளது. எனவே, வரும் மத்திய பட்ஜெட்டில், மேற்கண்ட இறக்குமதி தீர்வைகள் உயர்த்தப்பட வாய்ப்பில்லை என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.2,500 ஆதார விலை கிடைக்க வேண்டும் மத்திய அரசுக்கு ஜெயலலிதா கோரிக்கை

சென்னை, பிப்.17–

கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.2,500 ஆதார விலை கிடைக்க தமிழக அரசை மத்திய அரசு வலியுறுத்த வேண்டும் என்று ஜெயலலிதா கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜெயலலிதா கடிதம்

கரும்பு விவசாயிகளின் ஆதார விலை நிர்ணயம் குறித்து மத்திய மந்திரி சரத்பவாருக்கு, அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா கடிதம் எழுதியுள்ளார். இந்த கடிதத்தை பாராளுமன்ற அ.தி.மு.க. குழுத்தலைவர் தம்பிதுரை, துணைத்தலைவர் மைத்ரேயன் மற்றும் அ.தி.மு.க. எம்.பி.க்கள் டெல்லியில் மத்திய வேளாண்மைத்துறை மந்திரி சரத்பவாரை சந்தித்து கடிதத்தை அளித்தனர்.

இந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது:–

விலை உயர்வு

2005–2006–ம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சி இருந்த போது கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ.1014 ஆதார

விலை வழங்கப்பட்டது. இதில் மத்திய அரசு அறிவித்த விலை ரூ.795 மாநில அரசின் விலை 219 ஆகும். அந்த நேரத்தில் வெளி சந்தையில் சர்க்கரை விலை ரூ.12.50 முதல் ரூ.14 வரை இருந்தது. ஆனால் தற்போது (2009–2010) மத்திய அரசு கருப்புக்கான ஆதார விலையை ரூ.1,298 ஆக உயர்த்தியது. ஆனால் மாநில அரசின் ஆதார விலை ரூ.139 ஆக குறைத்து விட்டது.

கரும்பு விவசாயிகளுக்கு மாநில அரசு ஆதார விலையை குறைத்து விட்டதால் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து அவர்கள் தங்கள் பாரம்பரிய தொழிலை விட்டு விட்டு வேறு வேலையை நோக்கி திரும்பி விட்டார்கள். இதன் விளைவாக 2005–2006–ம் ஆண்டு 21.38 லட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த சர்க்கரை உற்பத்தி 2008–2009–ம் ஆண்டு 16.16 லட்சம் மெட்ரிக் டன்னாக குறைந்து விட்டது.

வலியுறுத்த வேண்டும்

உற்பத்தி குறைந்து விட்டதால் சர்க்கரை விலை வெளி சந்தையில் பல மடங்கு உயர்ந்து விட்டது. எனவே கரும்புக்கு வழங்கும் ஆதார விலையை உயர்த்தி வழங்குமாறு தாங்கள் தமிழக அரசை வலியுறுத்த வேண்டும்.

கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ஆதார விலையாக ரூ.2,500 கிடைக்க செய்ய வேண்டும். இல்லாவிட்டால் கரும்பு விவசாயிகள் பாதிக்கப்பட்டு சர்க்கரை உற்பத்தி பாதிப்புக்கு உள்ளாகி பெரும் தட்டுப்பாடு ஏற்படும். இதனால் சாதாரண மனிதர்கள் வாங்க இயலாத அளவிற்கு சர்க்கரை விலை உயர்ந்து விடும். ஒரு மாநில அரசு மக்களின் நலனுக்காக செயல்பட வேண்டும்.

இவ்வாறு அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

கரும்பு விலை தொடர்பான அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

கரும்புக்கு 2005–2006–ம் ஆண்டு மத்திய அரசு நிர்ணயம் செய்த விலை 795 ரூபாய் என்றும், தமிழக அரசினால் கூடுதலாக ரூ.642.40 சேர்த்து ரூ.1,437.40 வழங்கப்படுவதாகவும் கருணாநிதி அறிவித்து இருக்கிறார்.

தமிழக அரசு செய்தி வெளியீடு எண்.647 நாள் 24.9.2009ல் மத்திய அரசு சட்டப்பூர்வ விலையாக ரூ.1,077.60 என்று அறிவித்துள்ளதாகவும், மாநில அரசின் பரிந்துரை விலையான ரூ.359.80ஐயும் சேர்த்து ஒரு டன் கரும்புக்கு ரூ.1,437.40 வழங்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதாவது மத்திய அரசின் ஆதார விலை 1,077.60 என்றும், மாநில அரசின் ஆதார விலை ரூ.359.80 என்றும் தமிழக அரசின் செய்தி வெளியீட்டிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மாநில அரசின் ஆதார விலையான ரூ.359.80–ல் எனது ஆட்சி காலத்தில் அறிவிக்கப்பட்ட ஆதார விலையான ரூ.219–ம் அடக்கம். இதன் பிறகு மத்திய அரசு, தனது நுகர்பொருள் விவகாரம், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின் 31.10.2009 கடிதத்தின் மூலம் கரும்புக்கான நியாய மற்றும் ஆதார விலையை ரூ.1,298.40 என்று உயர்த்தி அறிவித்தது. இதனுடன் மாநில அரசின் ஆதார விலையான ரூ.359.80ஐயும் சேர்த்து கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.1,658.20 வழங்க வேண்டும்.

ஆனால், கருணாநிதியின் கூற்றுப்படியே ரூ.1,437.40 தான் வழங்கப்படுகிறது. அதாவது, மத்திய அரசின் ஆதார விலையான ரூ.1,298.40 உடன் மாநில அரசின் ஆதார விலையாக ரூ.139 மட்டுமே வழங்கப்படுகிறது. அதாவது, எனது ஆட்சி காலத்தில் வழங்கப்பட்ட மாநில அரசின் ஆதார விலையான ரூ.219–ஐ விட 80 ரூபாய் குறைவு. இதைத்தான் நான் விழுப்புரத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் சுட்டிக்காட்டினேன்.

உற்பத்தி குறைவு ஏன்?

எனது ஆட்சி காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பான நடவடிக்கைகள் காரணமாக, சர்க்கரை உற்பத்தி 2006–2007ம் ஆண்டு அதிகரித்து இருக்கிறது. பின்னர், 2007–2008ம் ஆண்டு சர்க்கரை உற்பத்தி 21.41 லட்சம் மெட்ரிக் டன்னாகவும், 2008–2009ம் ஆண்டு சர்க்கரை உற்பத்தி 16.16 லட்சம் மெட்ரிக் டன்னாகவும் குறைந்து இருக்கிறது. இதிலிருந்து, எனது ஆட்சி காலத்தில் ஏறுமுகத்தில் இருந்த சர்க்கரை உற்பத்தி, கருணாநிதி ஆட்சி காலத்தில் இறங்குமுகத்தில் சென்று கொண்டிருப்பதை யாரும் எளிதில் புரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு ஜெயலலிதா கூறியுள்ளார்.

**மரபணு மாற்றம் செய்யப்பட்ட பி.டி.கத்தரிக்காய் உடல் நலத்திற்கு தீங்கானது கனடா நாட்டு விஞ்ஞானி எச்சரிக்கை**

சென்னை, பிப்.17–

மரபணு மாற்றம் செய்யப்பட்ட பி.டி. கத்தரிக்காய் உடல்நலத்திற்கு தீங்கானது என்று கனடா விஞ்ஞானி ஷிவ் சோப்ரா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பி.டி.கத்தரிக்காய்

மரபணு மாற்றம் செய்த பி.டி.கத்தரிக்காய்க்கு தடை விதிக்க வேண்டும் என்று தமிழ்நாடு உள்பட 11 மாநிலங்களில் விவசாயிகள், விவசாய அமைப்புகள், தொண்டு நிறுவனத்தினர் வலியுறுத்தினார்கள். இதைத்தொடர்ந்து பி.டி. கத்திரிக்காய்க்கு அனுமதி கிடையாது என்று மத்திய அரசு அறிவித்தது. இருப்பினும் பி.டி. கத்தரிக்காய்க்கு எதிரான பிரசாரம் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்த நிலையில், மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவு பொருட்களினால் மனிதர்களின் உடல் நலனுக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றிய விளக்கக் கூட்டம் சென்னையில் நேற்று நடந்தது. மரபணு மாற்றத்திற்கு எதிரான தென்னகம் என்ற அமைப்பு ஏற்பாடு செய்த இந்த கூட்டத்தில், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கனடா நாட்டு விஞ்ஞானி ஷிவ் சோப்ரா பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

உடலுக்கு கேடு

பி.டி.கத்தரிக்காய் அதிக விளைச்சலை தரும் என்பது உண்மை அல்ல. தொடக்கத்தில் விளைச்சல் அதிகமாக தெரியும். ஆனால், போகப்போக விளைச்சல் குறைவதுடன் ரசாயனம் காரணமாக விளைநிலம் நாசமாகிவிடும். மண்ணில் நைட்ரஜனை நிலைப்படுத்தும் பாக்டீரியாக்கள், மண்புழுக்கள் உள்ளிட்ட உயிரினங்கள் செத்துவிடும். பி.டி. கத்தரிக்காய் உடல் நலனுக்கு தீங்கானது.

சுதந்திர போராட்ட காலத்தில் உப்பு சத்தியாகிரகத்திற்கு ஏற்பட்ட எழுச்சி இப்போது பி.டி. கத்தரிக்காய்க்கு எதிராக எழுந்திருக்கிறது வரவேற்கத்தக்கது. இந்த பிரச்சினை வெறும் விவசாயம் சம்பந்தப்பட்ட பிரச்சினை அல்ல. மக்களின் உடல் நலன் சம்பந்தப்பட்ட பிரச்சினை.

புதிய சட்டம் அறிமுகம்

மரபணு மாற்ற தொழில்நுட்பத்திற்கு ஆதரவாக இந்திய அரசாங்கம் உயிரிதொழில் நுட்ப ஒழுங்குமுறை சட்டம் என்ற சட்ட மசோதாவை வருகிற 22–ந் தேதி பாராளுமன்றத்தில் கொண்டு வர இருக்கிறது. இந்த சட்டம் அமலுக்கு வந்தால், மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகள் தவிர்த்து பாரம்பரிய விதைகளை விவசாயிகள் பயன்படுத்துவது கண்டு பிடிக்கப்பட்டால் 6 ஆண்டு ஜெயில் தண்டனை விதிக்கப்படும்.

அதுமட்டுமல்ல, மரபணு மாற்ற உணவு பொருட்கள் உடல் நலத்திற்கு கேடானது என்ற கூட்டம் போட்டு பேசினாலே 6 மாதம் உள்ளே தள்ளி விடலாம். இதை எதிர்த்து கோர்ட்டுக்கு செல்ல முடியாது. இதற்கென்று அமைக்கப்படும் குழுவிடம் சென்றுதான் முறையிட முடியும். இதுபோன்ற ஜனநாயக விரோதமான சட்டம் வேறு எதுவும் இருக்க முடியாது.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த கூட்டத்தில் இயற்கை விவசாய விஞ்ஞானி நம்மாழ்வார், தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

## உரம் விற்பனை விலை அதிகரிக்கும் அபாயம்: மத்திய அரசு அறிமுகப்படுத்த உள்ள புதிய திட்டத்தை நிறுத்த வேண்டும்; பிரதமர்-சோனியாவுக்கு கருணாநிதி கடிதம்

சென்னை, பிப்.17-

தமிழக முதல்-அமைச்சர் கருணாநிதி நேற்று எழுதியுள்ள கடிதத்தின் விவரம் வருமாறு:-

பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகளை வைத்து பார்க்கையில், உர (பெர்டிலைசர்) துறையில், உரத்தில் உள்ள சத்துக்களின் அடிப்படையில் மானியம் (நியூட்ரியன்ட் பேஸ்ட் சப்சிடி) அளிக்கும் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்த மத்திய அரசு தீவிரமாக பரிசீலித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, டி.ஏ.பி, எம்.ஓ.பி. காம்பிளக்ஸ் வகை உரங்கள் (யூரியா தவிர்த்து) போன்ற குறிப்பிட்ட வகை உரங்களுக்கு அவற்றில் உள்ள சத்துக்களை (நியூட்ரியன்ட்) அடிப்படையாக வைத்து, சம்பந்தப்பட்ட உரத் தொழிற்சாலைகளுக்கு மானியம் வழங்கப்படும். ஏப்ரல் 1-ந் தேதி முதல், உரத்தின் சில்லரை விற்பனை விலையை தொழிற்சாலையினர் தங்களது விருப்பம் போல் நிர்ணயித்துக் கொள்ளவும் வழிவகுக்கப்பட்டுள்ளது. இதுதவிர ïரியாவின் விலையும் 10 சதவீதம் அதிகரிக்கப்படவுள்ளது.

சத்து அடிப்படையிலான மானிய திட்டம் அமல்படுத்தப்பட்டால் உரத்தின் விலை கடுமையாக அதிகரிக்கும். இந்த புதிய திட்டத்தின் கீழ் விற்பனை செய்யப்படவுள்ள உரங்கள், பெருமளவு இறக்குமதி செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. சர்வதேசச் சந்தை மாறக்கூடியது என்பதால், அவற்றின் விலையை கட்டுக்குள் வைக்க முடியாது. இந்த உரங்களின் சமீபகால சர்வதேச விலையில் ஏற்பட்ட மாற்றங்களை கணக்கில் கொண்டு பார்க்கும்போது, அவற்றின் சில்லரை விற்பனை விலை பலமடங்கு அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன.

உரங்களின் விலை உயர்ந்தால், அது நம் நாட்டில் கண்டிப்பாக உணவு உற்பத்தியை பாதிக்கும். மேலும், விவசாயத்தையே வாழ்வாதாரமாக கொண்டுள்ள சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள், கடுமையாக பாதிக்கப்படுவார்கள்.

இந்த முடிவு, சமூகத்தின் பெரும்பகுதியினரை பாதிக்கும் என்பதால் இது தொடர்பாக ஒரு முடிவு எடுக்கப்படுவதற்கு முன்பாக, அரசியல்ரீதியான ஒரு கருத்தொற்றுமை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கருதுகிறேன். வேளாண்துறை பின்புலம் அதிகம் கொண்டிருக்கும் சில மாநில அரசுகளின் கருத்துக்களை கேட்பதும் ஏற்புடையதாக இருக்கும். இதுதவிர, டிஏபி மற்றும் காம்பிளக்ஸ் உரங்கள் தட்டுப்பாடு, மாநிலத்தில் இருப்பது பற்றியும் எனது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. வரும் சாகுபடி பருவத்துக்கு தேவையான இருப்பை ஏற்படுத்தி வைக்க வேண்டியது மிகவும் அவசியம். எனவே, இது தொடர்பாக கொள்கையில் ஒரு தெளிவான நிலை ஏற்பட வேண்டுமெனில் இவ்விஷயத்தில் உங்களது தலையீடு மிகவும் அவசியம்.

விலைவாசி உயர்வுக்கு குறிப்பாக உணவுதானிய விலை உயர்வுக்கு வழிவகுக்கும் எந்த ஒரு புதிய திட்டத்துக்கும் எனது எதிர்ப்பை தெரிவிக்கவே நான் விரும்புகிறேன். எனவே, உடனடியாக தலையிட்டு இந்த புதிய திட்டத்தை உரிய காலம் வரை நிறுத்த வைக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மேட்டுப்பாளையம் மார்க்கெட்டில் வெள்ளைப்பூண்டு விலை குறைந்தது**

மேட்டுப்பாளையம், பிப்.8-

நீலகிரி மாவட்டத்தில் தற்போது வெள்ளைப்பூண்டு சீசன் தொடங்கியுள்ளது. இங்கிருந்து மேட்டுப் பாளையம் மார்க்கெட்டில் உள்ள வெள்ளைப்பூண்டு மண்டிகளுக்கு கடந்த வாரம் 1000 மூட்டை வெள்ளைப் பூண்டு வந்திருந்தது. வெள்ளைப்பூண்டு ஒரு கிலோ ரூ.60-லிருந்து ரூ.150 வரை விற்பனை ஆனது. ஆனால் இந்த வாரம் 1200 மூட்டை பூண்டு வந்திருந்தது. ஒருகிலோ ரூ. 50- லிருந்து ரூ.120 வரை விற்பனை ஆனது. விலையில் சரிவு காணப்பட்டது.

மேட்டுப்பாளையம் மார்க் கெட்டுக்கு நீலகிரியில் இருந்து 3 லோடு, கோலாரில் இருந்து 20 லோடு, நைனிடாலில் இருந்து 5 லோடு வந்திருந்தது. நீலகிரி கிழங்கு 45 கிலோ ரூ.600-ல் இருந்து ரூ.640 வரை விலைபோனது கோலார் கிழங்கு ரூ.480-ல் இருந்து ரூ.540 வரையும், நைனிடால் கிழங்கு ரூ.350 இருந்து ரூ.370 வரையும் விற்பனை ஆனது.

மேலும் முட்டை கோஸ் 20 லோடு, கேரட் 3 ஆயிரம் மூட்டை, பீட்ரூட், 500 மூட்டை, முள்ளங்கி 800 மூட்டை, பீன்ஸ் 1000 மூட்டை, நூல்கோல் 50 மூட்டையும், டர்னிப்ஸ் 150 மூட்டையும் வந்திருந்தது.

முட்டைகோஸ் 1 கிலோ ரூ.2 லிருந்து ரூ.3, கேரட் 1 கிலோ ரூ.12 இருந்து ரூ.18 பீட்ரூட் 1 கிலோ ரூ.10-லிருந்து ரூ.14 முள்ளங்கி 1 கிலோ ரூ.2 லிருந்து ரூ.6 வரை விற்பனை ஆனது.

பீன்ஸ் 1 கிலோ ரூ.10 லிருந்து ரூ.15 பச்சைப் பட்டாணி 1 கிலோ ரூ. 25 லிருந்து ரூ.30, நூல்கோல் 1 கிலோ ரூ.6-லிருந்து ரூ.8, டர்னிப்ஸ் 1 கிலோ ரூ.4 லிருந்து ரூ.7 வரையும் விற்பனை ஆனது.